# முரசொலி

2 அணா

மு. கருணாநிதி

முரசு 1 | சென்னை | 13 — 8 — 54 | வெள்ளி | ஒலி 20


## சக்கரவர்த்தியின் திருமகன்

முக்காஜி

### தேகமும் உணர்வும்

"ஆனந்தமாக — ஆண்டுகள் பன்னிரெண்டு ராமனும் சீதையும் அயோத்தியில் சுகம் அனுபவித்தார்கள். இனி, உலகில் மக்கள் படும் இடையூறுகள், துயரங்கள் கோபதாபங்கள் — எல்லாவற்றையுமே பகவானும் ஈஸ்வரியும் நேராக ஊனுடலில் அனுபவிக்கப் போகிறார்கள்."

புரிகிறதா நண்பர்களே; புரோகிதர் தலைவரின் பொருள் பொதிந்த போக்கு! ராமாயணத்தில் வரும் கதாபாத்திரம் ராமன் இனி வரும் கட்டங்களில் எல்லாம் செய்யப் போகும் தவறுகளுக்கு இப்போதே திரை போட்டுக்கொள்ள விரும்புகிறார் ஆச்சாரியார். சென்ற இதழில் (ஆகஸ்டு 1.) ராமன், சீதை முதலியவர்களை கதாபாத்திரங்களெனக் கூறியதோடு நிற்காமல் சீதையின் அழகு, தேவலோகத்து சீதேவியின் அழகு போன்றது என இருவரையும் வேறுபடுத்திப் பிரித்துக்காட்டி, சீதையை மானிடப் பெண் என்றே எடுத்துக் காட்டிய மேதை ஆச்சாரியார்—ராமன் ராஜகுமாரனே தவிர—கடவுள் அல்ல என்று திட்ட வட்டமாக எழுதத் துவங்கிய சக்கரவர்த்தியார்—இப்போது கூறுகிறார்; பகவானும் ஈஸ்வரியும், மக்கள் படும் இடையூறுகள்—துயரங்கள்—கோபதாபங்கள் எல்லாவற்றையும் நேராக ஊனுடலில் அனுபவிக்கப் போகிறார்கள் என்பதாக! பகவான், தன் பத்தினியைக் காட்டுக்கு விரட்டலாமா?

பகவான் மறைந்திருந்து ஒரு வீரனைக் கொல்லலாமா?

இப்படியெல்லாம் இனிமேல் கேள்விகள் எழும் எனப் பயந்துதான்—ஆச்சாரியார் பகவானை மனித குணத்துக்கு அடிமையாக்க முயலுகிறார். அப்படி அவர் சொல்லும் போதும் ஏற்படுகிற வேடிக்கையான முரண்பாட்டைப் பாருங்கள். நன்றாக கவனிக்க வேண்டும் நண்பர்களே, நன்றாகக் கவனிக்க வேண்டும்.

"பன்னிரண்டு ஆண்டுகள் ஆனந்தமாக ராமனும் சீதையும் அயோத்தியில் சுகம் அனுபவித்தார்கள்."

ஆச்சாரியார்தான் எழுதியிருக்கிறார். ராஜகுலத்தில் உதித்த அந்த இனப ஜோடிகள் எப்படி யெப்படி தங்கள் காதல் கீததைதப் பாடியிருப்பார்கள் என்று நாமும் ஒரு முறை வர்ணிக்க வேண்டுமா என்ன? நான் சொல்ல வந்த விஷயம் அதுவல்ல! பகவானும் ஈஸ்வரியும் மனித குணங்களுக்கு உட்பட்ட, இடையூறு, கோபதாபம், எல்லாவற்றையும் அனுபவிக்கப் போகிறார்கள் என்று ஆச்சாரியார் கூறுவது எந்தக் காலத்திலிருந்து தெரியுமா? மீண்டும் படியுங்கள் தயவு செய்து! "பன்னிரெண்டு ஆண்டுகள் ஆனந்தமாக ராமனும் சீதையும் அயோத்தியில் சுகம் அனுபவித்தார்கள். இனி, உலகில் மக்கள் படும் இடையூறுகள், துயரங்கள் கோபதாபங்கள், எல்லாவற்றையுமே பகவானும் ஈஸ்வரியும் ஊனுடலில் அனுபவிக்கப் போகிறார்கள்."

இதில் வருகிற "இனி" என்ற வார்த்தையைக் கவனிக்க வேண்டும். பன்னிரண்டு ஆண்டுகள் இன்பமாக இருந்த இருவரும் இனிமேல் தான் உலக மக்கள் உணர்ச்சிகள் எல்லாவற்றையுமே ஊனுடலில் அனுபவிக்கப் போகிறார்களாம்.

அப்படியானால் சீதா கல்யாணம் ஆன பிறகு இருந்த அந்த பன்னிரண்டு ஆண்டுகளிலும சரி, அதற்கு முன்பு ராமனின் பால்யப் பருவத்திலும் சரி அவர்கட்கு ஊனுடலில் ஏற்படும் உணர்ச்சிகள் ஏற்பட்டதில்லையா?—கோபம் கொண்டதில்லையா?—தாடகையைக் கொல்ல கோதண்டத்தை வளைத்தது கோபத்தால் அல்லவா?-மனைவி சீதையுடன் பன்னிரெண்டு வருடம் ஆனந்தம் அனுபவித்தது, தாபம் ஏற்படாமல் என்று யாராவது கூற முடியுமா? ராமன் தான் கூறுவானா? தையல் சீதை தான் சொல்லுவாளா எனக்குத் தாபம் ஏற்படவில்லை யென்று!

பிறகு ஏன்—பிராமணஜோதி ஆச்சாரியார், கோபதாபங்கள் போன்ற மனித உணர்ச்சிகளை இனி பகவானும் ஈஸ்வரியும் ஊனுடலில் அனுபவிக்கப் போகிறார்கள் என்று கூற வேண்டும்? அப்படியானால் இதுவரையில் ராமனும் சீதையும் அனுபவித்த உணர்ச்சிகள் தேவ உடலில் அனுபவித்தவைகளா? விளக்கம் தேவை—வேதியப் பெருந்தகையாரே, விளக்கம் தேவை!

"எந்த அவதாரம்எடுக்கிறேனோ அந்த அவதாரத்துக்குரிய தேகமும் உணர்வுமாகத்தான் என் திருவிளையாடல் நடைபெற்றுவரும்—என்பது பகவானே சொல்லிய விளக்கம்."

ஆகஸ்டு 8ம் நாள் இதழிலே ஆச்சாரியார் இப்படிஎழுதியிருக்கிறார். "பகவான் வாமனவதாரம் எடுத்தார், அந்த உருவத்தைப் பற்றி வர்ணனைகளையும்-படத்தையும் கூட நாம் பார்த்திருக்கிறோம், மிக மிகக் குள்ளமான உருவம், சிறிய உருவம். மனித இலக்கணத்துக்கும் கீழான தேகம் படைத்த அவ்வளவுசிறிய உருவம் வாமனவதாரமென்று படித்திருக்கிறோம். என்ன செய்தது தெரியுமா? மாபலிச் சக்கரவர்த்தியின் வலிமையைக் கெடுப்பதற்காக-மூன்றடி மண் கேட்டு, உலகத்தையே இரண்டு அடிகளாக அளந்து விட்டது என்பது கதை! பகவான் எந்த அவதாரம் எடுத்தாலும், அந்த அவதாரத்திற்குரிய தேகமும், உணர்வுமாகத்தான் திருவிளையாடல் நடத்துவார் என்று ஆச்சாரியார் கூறுகிறார். கவனியுங்கள் இதையும்!

### தேகம் உணர்வு

இரண்டும் எடுத்தஅவதாரத்திற்குத் தக்க தாய்த்தானிருக்குமாம், பகவான் கூறிய விளக்கமாம். பார்ப்பனகுல மகிபரும் பகருகிறார், சரி! ஒப்புவோம்! "அப்படியானால் வாமனவதாரம் என்றசிறியதேகத்தின் பாதங்கள்

[ 2—ம் பக்கம் ]



# திருவிடமே திருப்பு முகத்தை!

"நல்ல மனிதர், நாணயமானவர், நேருவின் நெஞ்சழுத்தம்கூட அவரிடம் மண்டியிட்டுத் தாழ்பணியத்தான் வேண்டும். அச்சுக் குலையாத பரங்கியரின் மிடுக்கும், கண்டிப்பும் அவரிடம் உண்டு" என்றெல்லாம் பாராட்டப்பட்டவர் தான் அவர். வெள்ளையர் காலத்தில் காசுக் களஞ்சியத்தின் கவர்னராயிருந்தவர் — கண்ணியத்தையும் நீதியையும் நாமா அவருக்குக் கற்பிப்பது என்றுகூட ஒரு காலத்தில் நாம் எண்ணியிருக்கிறோம். அப்பேர்ப்பட்ட சிந்தாமணி தேஷ்முக் மூன்றாண்டு காலத்திற்குள் எவ்வாறு முரண்பட்டுவிட்டார் தெரியுமா? எத்தகைய மாறுதல் அவரது செயலில் பேச்சில்! தேஷ்முக் உள்ளத்திலே கூட தென்னாட்டின் மீது அலட்சிய எண்ணம் முளைவிடப் போவதை யார் எதிர்பார்த்தார்கள்? சேர்க்கை வாசனை, அந்த செல்வப் பெட்டியின் காவலரையும் சிக்கவைத்துவிடும் என்று நினைத்தவர்கள் யார்? தென்னாட்டு மக்களின் மீது என்ன தான் அவருக்கு ஆத்திரமோ தெரியவில்லை—நம்பமுடியவில்லை நம்மால். மெய்மறந்து சொல்லியிருப்பார் என்றும் சொல்வதற்கில்லை—பேசியுள்ள இடமோ பெங்களூர்—உல்லாசபூமி அது - ஊசிமழை எப்போதும்! அங்கு தான் சொல்லியிருக்கிறார், "இலங்கையிலிருந்து திரும்பி அனுப்பப்படும் இந்தியரை ஏற்று, வேண்டுவன செய்ய சென்னை சர்க்காரால்தான் முடியும். இந்த பிரச்சினை முக்கியமாக சென்னை சர்க்காரின் கவனத்திற்கே உரியது" என்று. அவர் கூறியிருப்பதற்குக் காரணம், இலங்கையிலிருந்து திரும்புவோர் அனைவருமே தமிழர்கள் என்பதற்காகத் தான் என்பதை நாமறிவோம்.

ஆனாலும் ஏக இந்தியா என கூச்சல் போட்டு விட்டு இலங்கை இந்தியர் பிரச்னையில் மட்டும் 'அது மாநில சர்க்காரைப் பொருத்தது' என்று கூறுவது முறையல்ல என்பதோடு, டில்லி ஒப்பந்தத்தினால் தான் தமிழர்களுக்கு இக்கதி நேர்ந்தது என்பதையும் தேஷ்முக் மறந்துவிட்டார்.

இலங்கையிலிருந்து வருபவர் அனைவரும் தமிழர்களாம்-அவர்களை தமிழ்நாடுதான் ஏற்றுக்கொள்ள வேண்டுமாம்—சொல்லுகிறார் சிந்தாமணியார். இந்தப் பொறுப்பு எங்கே டில்லி மீது சாய்ந்து விடுகிறதோ என்றஞ்சி நமக்கு ரோஷ மூட்டிப் பார்க்கிறார்—வருவோரெல்லாம் உங்களவர் தான் என்று. இனப்பற்றைக்காட்டி, இலங்கையிலிருந்து வருபவர்களின் தொல்லையை சென்னையின் பக்கத்திற்கு திருப்பிவிட முயலுகிற மந்திரியார், இலங்கை இந்தியர் பிரச்னை குறித்து ஒப்பந்தம் செய்கையில் சென்னையைக் கலந்தாலோசிக்காதது ஏன்? துன்பத்தையும் தொல்லைகளையும் தாங்கிக்கொள்வதற்குத்தான் தென்னாடு; இன்பத்தையும் இன்னபிற சுகங்களையும் அனுபவிக்கவே டில்லி என்பது தான் இந்திய அரசாங்கத்தின் ரகசியத் திட்டம் போலும்! இலங்கை இந்தியர் வருகையைப் பொருத்தவரை மட்டும் மொழியைக் காட்டிடத் துடிக்கும் அமைச்சருக்கு, நெய்வேலிச் சுரங்கம்பற்றிய பிரச்னையில் மட்டும் ஏன், தமிழகத்தின் பூமி நினைவுக்கு வரவில்லையோ தெரியவில்லை. நெய்வேலி நிலக்கரி சுரங்கத்திற்கான பொருட்செலவு பற்றிப் பேச்சுவரும்போது தேஷ்முக் ஒரு இடத்தில் சொல்லியிருக்கிறார், "சென்னைக்கு தொல்லைகள் அதிகம்—சுரங்கச் செலவை நாங்கள் தான் ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்பதாக, சென்னைக்குத் தொல்லைகள் அதிகமாம்—சொல்லுகிறார் பணத்திலே புரளுகிறவர். நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்திலே சென்னைக்கு உரிமையில்லாது செய்துவிட வேண்டுமென்று எண்ணிச் செய்யும் டில்லியின் சதி நமக்குத் தெரியாதென்று நினைக்கிறார் சிந்தாமணியார். தாயகம் திரும்பும் தமிழர்களுக்கு வழி வகைகள் செய்து கொடுக்க விரும்பாத அரசாங்கத்திற்கு, அந்தத் தமிழ் நிலத்தின் கருவூலத்தை அபகரித்துச்செல்ல மட்டும் உரிமை எங்கிருந்து வந்தது?

தொல்லைகள் அதிகமாம்-பரிந்து பேசுவதாக நடித்துக் காட்டுகிறார், பவுசுக்காரார். பழம் இலக்கியங்களையே படித்துப் படித்து ஒதுக்கித் தள்ளும் நமக்கு 'நீலிக் கண்ணீர்' கதைகள் புதிதல்லவே. நீலிக் கண்ணீர் வடித்து காரியங்களைச் சாதித்துக் கொண்ட காலம் ஒன்றிருந்தது — அது சாணக்கியன் காலம்—சத்குருக்கள் காலம். இப்போது நடக்காது, செங்கோலின் ஒரு முனையிலே வெண்ணெயும், மற்றொரு முனையிலே சுண்ணாம்பும் இருந்தால் "திருவிடமே, திருப்பு முகத்தை திற விழியை, தில்லியோடு நமக்கேன் தொடர்பு?" என்பதில் என்ன தவறு சொல்ல முடியும், ∴

## சக்கரவர்த்தி....

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

எவ்வளவு சிறியதாய் இருந்திருக்க வேண்டும்? அந்த சிறிய பாதங்களால் ஜெகத்தை எப்படி அளந்தது வாமனாவதாரம்?" என்று அறிவுள்ளவர்கள் கேட்க மாட்டார்களா? ஆச்சாரிய மேதை அதற்குப் பதில் சொல்ல வேண்டாமா?

அவதாரத்திற்குத் தகுந்த தேகமும், உணர்வும் பெறுவாராம் பகவான். வராகவதாரம் எடுத்தார்—பூமியைத் தூக்கிக் கொண்டு வந்தார், பன்றியைப் போன்ற தேகம் பெற்றார்—சரி! ஆனால் அந்தப் பன்றி பூமாதேவியுடன் இன்பம் அனுபவிக்கிற அளவுக்கு உணர்வு பெற்றது என்று புராணம் எழுதப்பட்டிருக்கிறதே அதுதான் அவதாரத்திற்குத் தகுந்த உணர்வா? என்று ஆச்சாரியாரை வினயத்தோடு கேட்க ஆசைப் படுகிறோம்:

### பட்டாபிஷேகம்.

ராமனுக்குப் பட்டாபிஷேகம் நடத்த ஏற்றதொரு நாள் குறிக்க வேண்டுமென்று தசரதன் சபையில் அறிவிக்கிறான். பிறகு ஏதோ ஒரு யோசனைவந்து, மறுநாளே புஷ்ய நட்சத்திரத்தில் ராமனின் பட்டாபிஷேகத்தை வைத்துக் கொள்வதென்று முடிவுசெய்து அதை ராமனிடமும் தசரதன் கூறுகிறான். அவ்வளவு அவசரமாக தசரதன் நாள் வைத்தமைக்குக் காரணம் என்னவென்று ஆச்சாரியார் விளக்குகிறார் பாருங்கள்.

"கைகேயியை விவாகம் செய்து கொண்ட காலத்தில் தசரதன் கேகனுக்கு (கைகேயின் தந்தை) கொடுத்த வாக்கு அவன் நினைவுக்கு வந்து அது அவனை மனத்தில் தொந்தரவு செய்ததுபோல் தோன்றுகிறது, பரதன் மிக நல்லவன், அண்ணனிடம் அவன் மிக்க அன்பும் பக்தியும் வைத்தவன், ஆனபடியால் கைகேயி விவாக நிபந்தனையை அவன் பொருட்படுத்த மாட்டான், ஆயினும் மனிதனுடைய மனத்தை நம்பக்கூடாது, நல்லவருடைய புத்தியும் சில சமயம் மாறிப்போகும் என்று தசரதன் பயந்தான்,"

புரிகிறதா தோழர்களே! பரதனுக்குப் பட்டம் கட்டுவதாக தசரதன் வாக்களித் திருப்பது—யுத்தத்தில் உதவி செய்த தன் மனைவி கைகேயி என்பவளை தான் மணந்திட விரும்பிய போது அவள் தகப்பன் கேகய மன்னன் விதித்த நிபந்தனை அது! உனக்கு மூத்த மனைவியிருப்பதால் அவள் மகன் பட்டத்திற்கு வரநேரும்; என்மகள் கைகேயியின் மகனுக்குப்பட்டம் தருவதாக வாக்களித்தால் அவளைத் திருமணம் செய்து கொள்ளலாம் என்று கேகேய மன்னன் நிபந்தனை விதித்தான். அதை ஒத்துக் கொண்ட தசரத ராஜன் தான் இப்போது, பரதன் ஊரில் இல்லாத சமயம் அவசர அவசரமாக மூத்தவன் ராமனுக்கு பட்டாபிஷேகம் செய்ய ஏற்பாடு துவங்குகிறான்,

"பரதன் ஊரில் இல்லை. அவனுக்கு இப்போது சொல்லி அனுப்பி வரவழைக்க அவகாசமில்லை. அவன் வருவதற்காக காரியத்தை நிறுத்திவைப்பது உசிதமல்ல"

தசரதன், ராமனிடம் கூறுகிறான் இப்படி. ஆச்சாரியார் எழுதியிருக்கிறார். தோழர்களே! சூழ்ச்சி எங்கே முதலில் உருவாகிறது பாருங்கள், கைகேயி இடத்தில் அல்ல; தசரதன் இடத்தில்தான் சூழ்ச்சி உருவாகிறது என்பதை ஆச்சாரியார் தன்னையறியாமலே ஒத்துக் கொள்ள நேரிடுகிறது.

"ராஜ்யாதிகாரம் உடனே வகிக்க வேண்டு மென்று ராமனுக்கு ஆசை இருக்கவில்லை. அதை கடமையாகவே பாவித்தான். அரசன் ஒப்புக் கொள்ளும்படி சொன்னால்சரி, இல்லாவிட்டால் வேண்டியதில்லை என்பது அவன் கருத்து."

இப்படிப் பட்ட ராமன் — அருங்குணவான் - தகப்பனுடன் சேர்ந்து சூழ்ச்சியில் எப்படி ஈடுபடுகிறான் பாருங்கள். ஆச்சாரியாரே எழுதுகிறார்; படியுங்கள்·

"பரதன், அண்ணனைக்குருவாகக் கருதுகிறவன் தர்மாத்மா, சுத்தமான உள்ளமும் ஆசைகளை அடக்கும் சக்தியும் பெற்றவன். ஆயினும் மனுஷ்யனுடைய சித்தம் எப்போதும் ஒரே விதமாக இருக்காது. என்று தசரதன் ராமனிடம் சொல்லி......பரதன் வருவதற்காக காக்க வேண்டாம் என்று வசிஷ்டருக்கும் தெரிவித்து விட்டான்

[ 10-ம் பக்கம் பார்க்க ]

# தலையங்கம்

சென்னை [13—8—54] வெள்ளி

## வெல்க, விடுதலைப்படை !

இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு பகுதிகளிலே உரிமைக் கிளர்ச்சிகள் குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருக்கின்றன. அவற்றில் சில நல்ல முடிவை நோக்கியும்—சில தெளிவு காணாத புதுக் குழப்பங்களை சந்திக்கும் நிலையிலும் நடை போடுகின்றன என்பதையும் நாடறியும்.

இந்தத் துணைக் கண்டத்து மண்ணில் சில திட்டுக்களுக்கு சொந்தம் பாராட்டும் வீண் கௌரவத்தை விட்டுக் கொடுக்க மனமின்றி விடுதலை வீரர்கள் மீது ஆயுதப் பிரயோகம் செய்து கிளர்ச்சியை வீழ்த்திவிடலாம் என எண்ணுகிறது போர்ச்சுகீசிய ஆதிக்கம். கோவா, டையு, டாமன் போன்ற திட்டுப் பகுதிகளில் கொட்டு முழக்கோடு என்றும் வாழலாம் என கனவு காண்கிறது; கதிரவன் அஸ்தமிப்பதில்லை எமது சாம்ராஜ்யத்தில் என்று பிரதாபம் படித்த பிரிட்டிஷாரே வெளியேறிவிட்ட சம்பவத்தை மறந்துவிடும் அளவுக்கு காலம் ஓடி விடாததற்கு முன்பே! போர்ச்சுகீசியர் வியாபாரி வேடத்திலே வந்து வளைத்த பகுதிகள்தான் கோவா முதலிய பிரதேசங்கள். யாருடைய சொத்துக்கோ போலி உரிமை கொண்டாடும் போர்ச்சுகீசியர்—சரித்திரத்தின் விடுதலை அத்தியாயங்களிலே 'வில்லன்' பாத்திர மேந்தி நிற்க விரும்புகிறார்கள் என்றுதான் கருத வேண்டியிருக்கிறது; அவர்கள் போகும் போக்கைப் பார்த்திடும் போழ்து! கிளர்ச்சி **அனல்** அடங்கவில்லை. அதை அடக்குவதற்காக ஆதிபத்யவாதிகள் வீசும் அடக்குமுறைப் பாணங்கள் பயனற்றுப் போகின்றன கோவா பகுதிகளில்! அதற்கோர் எடுத்துக் காட்டு கோவா தேசீய காங்கிரஸ் தலைவர் திரு பீட்டர் அல்வாரிசின் எச்சரிக்கை. ஆகஸ்டு 15ம் நாள் உரிமைக் கிளர்ச்சி வீரர்கள் கோவா பகுதிகளில் அமைதியான முறையில் அறப் போர் நடத்த நுழையப் போகிறார்கள் என்ற செய்தியும் உறுதியாகிவிட்டது.

இங்கே—பிரஞ்சிந்தியப் பிரதேச மென அழைக்கப்படும், புதுவை காரைக்கால் பகுதிகளிலே அறப் போரின் உத்வேகம் குறையவில்லை. பாரிஸ் மனிதர்களின் சந்தையாக மாறிவிட்ட பாண்டியும், காரையும் புது வாழ்வு பெறத் துடிக்கின்றன. ஏறத்தாழ இரண்டு மூன்று மாதங்கட்கு மேலாக எழுச்சி முரசம் ஒலித்து போர்க் கொடியைப் பறக்க விட்டவர்கள் புதுவை காரை விடுதலை வீரர்கள். ஊர்வலங்கள் என்ற பெயராலே உரிமை முழக்கம். அதன் குறுக்கே பிரஞ்சு ஆதிக்கத்தின் உளுத்துப் போன குண்டாந்தடிப் பிரயோகம். சிறைக் கொடுமை. இன்னபிற அவதிகள். கிராமம் கிராமமாக கிளர்ச்சி வீரர்களின் கையிலே சிக்கின. முறைத்துப் பார்த்தும் — முண்டா தட்டி பயமுறுத்தியும்—மொழியிலே கனல் கலந்தும்—ஆவேசத் தாண்டவம் ஆடிக் காட்டிய பிரஞ்சு ஆதிக்க புரியினர், இன்றைய தினம் ஈனஸ்வரத்தில் பேச ஆரம்பித்து விட்டனர். அமைதியான முறையில் அதிகாரத்தை மாற்றிக் கொடுத்துவிட்டு, கப்பலேறப் போகிறோம் என்ற செய்தி மலர்ந்துவிட்டது அவர்கள் பாசறையிலேயிருந்து. எல்லாக்கட்சிகளும்-ஆதிக்க வெறியர்களின் கீழே அடிமையாயிருத்தல் கூடாது என முடிவு கட்டி நடத்திய போர் வெற்றிகரமான கட்டத்தில் அடியெடுத்து வைத்திருக்கிறது. எல்லா முற்போக்கு கட்சிகளும், தி. மு. கழகமும் தனது தொண்டர்களை சிறைக்கு அனுப்பியும், தடியடிகளுக்கும் குண்டர்தம் தொல்லைக்கும் பலி கொடுத்தும் இந்த வெற்றி விடிவெள்ளியைக் கண்டு ரசிக்கும் வாய்ப்பை பெற்றுவிட்டன. பிரெஞ்சுப் பிணைப்பிலேயிருந்து விடுபடும் புதுவை காரைப் பகுதிகள் இந்திய அரசு எனப்படும் வடவர் ஏகாதிபத்ய வெம்மையில் தானே வாடிட வேண்டும் என வேதனைப் படுவோர் உளரேனினும், அதை நாமும் உணருகிறோம் எனினும்—ஒரு ஏகாதிபத்யம் தொலைகிறது என்ற பூரிப்பை நாம் மறைத்துக் கொள்ளத் தயாராயில்லை. கோவா பகுதிகளில் கோலோச்சும் போர்ச்சுகீசியர் போலவே பிரஞ்சுக்காரரும் வியாபாரிகளாக வந்து ஆட்சிக் குடை போட்டுக் கொண்டு இங்கே உட்கார்ந்து விட்டவர்கள் தான். டூப்ளேயின் திறமையில் ஏற்பட்ட சிறு மூளியால் இந்தத் துணைக் கண்டம், ஆங்கிலேய வியாபாரிகளின் கைக்குமாறிவிட்டது. அத்துணை மகத்தான ஆவலுடன் குடியேறிக் கோலேந்தியவர்கள்—கையில் சிக்கியிருந்த கடுகுப் பிரதேசத்தையும் விட்டுச் செல்வதென்றால் கொஞ்சம் வேதனையாகத் தானிருக்கும். என்ன செய்வது. இதைவிட வேதனையான கோலத்திலே வெளியேற்றப்படவேண்டியநிலைமை ஏற்படாததற்கு, பாரிஸ் மனிதர்கள் சந்தோஷப்பட்டுத் தீர வேண்டும் என்ற ஆறுதலைத்தான் அவர்களுக்கு அளிக்க விரும்புகிறோம். வெளிநாட்டினர்—வெள்ளையர்—எதிர்க்கப்படும்போது விலங்குகளும், விரட்டல் பாணங்களும் வீறு கொண்டெழுவது போலவே—**தாரணிக்குச்** சொந்தமுள்ள மக்கள், மொழிவாரியாக அமையும் தங்கள் பூமியின் வளையங்களை ஒழுங்காகப் போட்டுக் கொள்ள விரும்பினால், அதற்கு இடையூறு செய்வதிலே இணையற்று விளங்குகிறது இந்த நாட்டு சர்க்கார் என அழைக்கப்படும் நேரு சர்க்கார். திருத்தணி, **சித்தூர் பகுதி**களிலே தமிழர் ஆந்திரர் தகராறுகளைக் கிளப்பிவிட்டு வேடிக்கை பார்க்கும் நிகழ்ச்சி-விரும்பத் தகாத நிகழச்சி. தமிழகத்திற்குச் சொந்தமான பகுதிகளை உடனே தமிழகத்தோடு இணைத்துவிடுக என்ற முழக்கத்தை அழித்திடும் ஆணவப் போக்கு கொண்டு அலைகின்றனர் ஆளவந்த வீரர்கள். கேரளத்துக் கரையோரத்திலேயும் போர் முனை அமையக் காரணமாயிருந்துவிட்டனர் வடநாட்டு ஏகாதிபத்யவாதிகள். திரு. கொச்சி தமிழ்ப் பகுதிகளை தமிழ் நிலத்தோடு சேர்க்க வேண்டும் என்ற கிளர்ச்சி அங்கே கொழுந்து விட்டெரிகிறது. பட்டம் தாணுப் பிள்ளையே போதும் இவர்கள் கொட்டம் அடக்க என எண்ணிடும் பண்டித நேரு, கட்டுமீறி அவிழ்த்துவிடப்பட்ட அடக்கு முறைகளை அனுமதித்துக் கொண்டிருக்கிறார், மலையாள மாந்தரும்—தமிழரும், மொழியால் இருவர்—இனத்தால் ஒருவர்—என்ற இலட்சியச் சொல்லை இதயத்தில் ஏந்தி நடக்கும் தி. மு. கழகம், தமிழகப் பகுதிகள் தமிழகத்துடன் இணைக்கப்பட வேண்டியதுதான் முறையென முரசொலித்து, களத்திலே இறங்கியது. ஒரே நாள்—அடையாள மறியல் என்றபெயரால் செங்கோட்டையிலும், நாகர்கோவிலிலும் நூற்றிப்பத்து பேர்—தி. மு. கழக வீரர்கள் கைது செய்யப்பட்டு, சிலர் விடுதலை செய்யப்பட்டும், பலர் மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை பெற்றுமிருக்கின்றனர். அறப்போர் அங்கே இன்னும் தொடர்ந்து நடைபெற இருக்கிறது.

தி. த. நா. காங்கிரஸ் என்பது. போர் வெற்றிக்குப் பிறகு கலைக்கப்பட்டுவிடும் ஒரு இயக்கம் என கூறப்பட்டு, எல்லா முற்போக்கு கட்சிகளின் ஆதரவும் கோரப்படுகிறது.

திரு-கொச்சி-தமிழ்ப் பகுதியில் நல்ல பலம் பெற்றுள்ள நமதுகழகம், தோழர் ஜான் அவர்கள் கண்காணிப்பிலே மீண்டும் போரைத் தொடர்வதற்கான ஏற்பாடுகளை விரைவில் யோசிக்கும். அடையாளப் போரில் வெற்றிச் சங்கொலித்த வீரர்கள் அனைவரையும் வாழ்த்துகிறோம்-உரிமைக்குப் போர்க்கொடி தூக்கிய உத்தமர்கள் அனைவரையும் பாராட்டுகிறோம். துணைக்கண்டமெங்கும் பரவியிருக்கும் போராட்ட ஜ்வாலைகள், மக்கள் புதுயுகம்நோக்கிவிடுதலைகீதம்பாடிவிரைகிறார்கள்என்பதற்குஅறிகுறி.

அதை வரவேற்கிறோம். உரிமைப்போர் எங்கு நிகழ்ந்தாலும் அது நம் உள்ளத்தைக் கவரும். தியாகத் தழும்புகளை ஏற்று நிற்கும். தி. மு. கழகம் ஒரு விடுதலைப் பட்டாளம். அது, விடுதலை விரும்பிகளை—உரிமை நாடும் செயல் மணிகளை நிச்சயம் தோளோடு தோள் அணைத்து மகிழ்ந்துதான் தீரும்—வெல்க, விடுதலைப்படை—இங்கும்—அங்கும்—எங்கும்!



# ● பட முடியாதினித் துயரம்! ●

தொடுவானைக் கப்பிவிட்ட தங்கப் பரிதியோ — அன்றி டயர்களின் துப்பாக்கிப் பிரயோகத்தால் வீரர்கள் சிந்திய குருதி வெள்ளமோ—என்றெல்லாம் ஐயுரும்படி நிபாகம் தந்து—தளும்புகள் பெற்று ஏகாதிபத்திய ஓநாய்களை இந்நாட்டை விட்டு ஓட்டிய நாளாம் ஆகஸ்ட் 15, அருகிலே வருகிறது. அன்றைய தினம் ராஜ கட்டத்திலே தேசத்தின் பிதாவை நினைத்து வேதனைக் கண்ணீர் பெருக்குவார், பிரதமர் நேரு. ராஜ பவனில்—பிரார்த்தனைக்குப் பிறகு பிரமாதமான விருந்து வைபவங்கள் நடைபெறும். செக்கிழுத்த சிதம்பரங்களும்—தூக்கு மேடை யேறிய பகத்சிங்குகளும் மேற்கோள் காட்டிப்பட்டு—வெள்ளையனின் பேயாட்சியை நினைத்து செக்குறுகுவர் தேசியத் தோழர்கள்.

கல்லக்குடி களத்திலும் தூத்துக்குடியிலும் ஆறு பிணங்களை உலகுக்கு அறிவித்தவர்கள்தான் டயர்களின் காட்டுமிராண்டிச் செயலைப் பற்றி கதையளக்கப் போகிறார்கள்.

வெண் மணற் பரப்பாம் குடந்தையின் தெருக்களை செம்மணற் பாலையாக மாற்றியவர்கள்தான் வெலிங்டன் ஆட்சியின் அடக்குமுறைத் தாண்டவத்தைப்பற்றி வரலாறு எழுதப் போகிறார்கள்.

வேதனையான காட்சிதான்—நமக்கு! வேங்கையின் இரத்த தாகத்தை சிறுத்தைகள் கண்டிக்கின்றன. மருத்துவம் பார்ப்பதாக நோயாளியின் நாக்கை நீட்டச் சொல்லும் வைத்தியப் பெருந்தகை—அந்த நோயாளியின் நாவையே துண்டித்து எடுத்து தொலைநோக்கி மூலம் பரீட்சை செய்வதைப் போலத்தான் இருக்கிறது, ஆளத் தெரியாதவர்கள் ஏழாண்டு காலமாக நடத்திவரும் ஆட்சி முறை! ஐந்தாண்டுத்திட்டங்கள், அதற்கு உதவியாக அமெரிக்க நாட்டு பூமான்களிடமிருந்து டாலர் உதவி — அதுவும் போதாமல் கோடி கோடியாக உள் நாட்டுக் கடன்,

பட்டியல் பெருகுகிறதே தவிற ஏழையின் வட்டிலிலே சோறு நிரம்பியதாகத் தெரியவில்லை. ஏன் இந்த நிலைமையென்று வினை எழுப்புபவர்கள் திருப்தி செய்ய முடியாத எதிர் காட்சிக்காரர்கள் என்ற இருட்டறையிலே தள்ளப் பட்டு விடுகிறார்கள். பொருளாதாரத் திட்டத்தைப்பற்றி புகார் சொல்லுபவர்கள் வீண் 'புரட்டுக்காரர்கள்' மட்டுமல்ல; அவர்கள் முகாமிலேயே அந்த வர்க்கமும் உண்டு என்பதை எடுத்துக் காட்டுவதைப் போலத்தான் ஆகஸ்ட் 8-ந்தேதி இதழிலே கல்கியார் அழகாக எழுதியிருக்கிறார். அது, இதோ!

"பாரதசேவக சமாஜத்தாரும், சமூகநலத் திட்டங்கள்-தேசிய விஸ்தரிப்புத்திட்டங்களை நடத்துவோரும் கிராமங்களுக்குச் செல்லும்போது, எதிர்பார்த்த அளவில் கிராமவாசிகளின் ஒத்துழைப்புக் கிடைப்பதில்லை என்பது நாடறிந்த உண்மை......

"வீதிகளைச் சுத்தம் செய்கிறோம், சாலைகளைப் போடுகிறோம் என்று சொல்லிக் கொண்டு இன்று வருகிறார்கள். நாளைக்கு 'உங்கள் வோட்டை எங்களுக்குப் போடுங்கள்! என்று கேட்கப் போகிறார்கள்!" என்று ஒரு பகுதியார் எண்ணுகிறார்கள்.

"அரசாங்கத்தாரிடமிருந்து அமெரிக்கா முதலிய தேசங்களிலிருந்தும் நமக்காகப் பணம் வருகிறது. அதைச்செலவழித்து விட்டுக் கணக்கு எழுதுவதற்காக இவர்கள் இப்படியெல்லாம் கிராமசேவை செய்வதாகப் பாசாங்குசெய்கிறார்கள்!" என்று சந்தேகப்படுகிற கிராமவாசிகளும் உண்டு.

"இவை எல்லாவற்றையும் விட, கிராமவாசிகள் உற்சாகமாக ஒத்துழையாமலிருப்பதற்கு முக்கிய காரணமாயிருப்பது அவர்களுடைய வறுமைக் கொடுமைதான்.

"நாளைக்குச் சாப்பிட உணவு இல்லை, மழை பெய்தால் தங்குவதற்கு இடமில்லை. குடிசையின் கூரையில் ஓட்டை விழுந்து பெய்கிற மழையெல்லாம் குடிசைக்குள் விழுகிறது. குழந்தைகள் சேற்றில் புரளவேண்டியிருக்கிறது. சாலை போடுகிறார்களாம் சாலை! இவர்களுடன் ஒத்துழைந்து வேலை செய்ய வேண்டுமாம் வேலை! இன்றைக்கு நான் கூலிக்கு வேலை செய்யப் போகாவிட்டால் நாளைக்குச் சோறு கிடைக்கும் வழி என்ன?'என்று கேட்கும் கிராம வாசிகள்தான் பெரும்பாலோர்.

"ஆகையால், கிராமமுன்னேற்றத்துக்கு தொண்டு செய்வதற்கென்று போகிற தொண்டர்கள் விளக்குமாறு எடுத்து வீதிகள் கூட்டுவதையும், மண்வெட்டி பிடித்துச் சாலைகள் செப்பனிடுவதையும், கிராமவாசிகள் சற்று தூரத்திலிருந்தபடி வேடிக்கை பார்ப்பது போல் பார்த்துக் கொண்டிருந்து விட்டுத் தத்தம் வேலைகளைக் கவனிக்க போய் விடுகிறார்கள்."

ஆட்சி பீடத்தில் இருப்பவர் ஆச்சாரியார் அல்ல என்பதால் தானோ என்னமோ கல்கியார் சற்று துணிவாகவே தேசியத்தார்களின் திறமையின்மையை தீட்டியிருக்கிறார், இப்படி!

செஸ்டர் பவல்ஸ் சொன்னதைப்போல இந்தியா ஏழை நாடல்ல; ஏழைகள் நிரம்பிய நாடு. சுதந்தரம் பெற்ற இந்த ஏழு ஆண்டுகளிலே ஏழைகளாகி விட்டவர்கள் ஏராளம்!

பாராளும் பாரதவீரர்கள் ஊரோடு பிச்சைக்காரர்களாகி விட்ட இந்த பாரிகளைப் பற்றி நினைத்ததாகவே தெரியவில்லை. இத்தகையவர்களின் ஆட்சிதான் பரிதாபகரமான எட்டாவது ஆண்டை அடையப் போகிறது!

புரையோடிப் போன ராஜப் பிளவை — அதை அறுத்து அடக்க ஆற்றலில்லாத வைத்தியரிடம் வியாதியஸ்தன் ஒப்படைக்கப்பட்டு விட்டான்! ஆம்; வறுமை நோயை விரட்டி அடிக்க காந்தீயம் என்னும் பச்சிலை மருந்து பயன்தராது. பேப்பர் திட்டங்களும் — பேரிகையென முழங்கும் பேச்சுகளும் அயல் நாட்டுக்காரர்களிடமிருந்து "அப்லாஸ்" பெற உதவுமேயன்றி நோய் தீர்க்காது.

காங்கிரஸ் முகாமிலே செயல்படும் திட்டங்கள் தருவதற்குப் பக்குவ மடைந்தவர்கள் யாருமில்லை. அங்கே இருந்து தூரத்தப் பட்டவர்களோ, "சாமிப்பிய நிலையடைய சாமளவர்ணனுக்கு சாமரம் வீசுங்கள்" என்று வாய் வலிக்க வானொலிப் பிரசங்கம் செய்கிறார்கள்!

இந்த வெத்து வேட்டு ஆட்சி இன்னும் எத்தனை ஆண்டுகள் தொடரவேண்டுமோ? அந்த தேசியச் சிறைக் கோட்டத்தின் அடிமைக் கைதிகளாக திருவிடத்து மக்கள் இன்னும் எத்தனை காலம்தான் வாழ வேண்டுமோ?


**பேசும் படம்**
**ஆண்டு மலர்**

●

ஓவியத் துணுக்குகளும், காவியத் துணுக்குகளும் நிரம்பிவழிய பேசும் படத்தின் 1954 ஆண்டு மலர் காட்சிதருகிறது.

'பட உலக டயரி' ஒரு அருமையான தொகுப்பு- ஒவ்வொரு பக்கமும் அழகான படங்கள் அழகுக்கு அழகு சேர்க்கின்றன.

சினிமாத் தொழிலில் ஈடுபட்டவர்கள் தோழர் ராம்நாத்தின் இந்த முயற்சியை பாராட்ட கடமைப் பட்டிருக்கிறார்கள்,

**விலை ரூபாய் 5**



## காஞ்சியில்
## செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. மாநாடுகள்

★

## கண்ணன்டாக்கீஸ்மைதானத்தில் நடைபெறும்

●

| 21-8-54 சனியன்று | 22-8-54 ஞாயிறன்று |
|---|---|
| சமூக சீர்திருத்த மாநாடு | அரசியல் மாநாடு |
| தலைவர் : | தலைவர் ; |
| கலைவாணர் என். எஸ். கே. | இரா. சு. தங்கப்பழம் |
| திறப்பாளர் ; | துவக்குபவர்; |
| புரட்சி நடிகர் | |
| எம். ஜி. ராமச்சந்திரன் | திருச்சி எம். எஸ். மணி |

பொதுச் செயலாளர், மற்றும் கழக முன்னணி வீரர்கள் அனைவரும் கலந்து கொள்வர்.

**இருநாட்களிலும் புதுமை நடிகர் ராஜேந்திரன் நடிகமணி நாராயணசாமி குழுவினரின் 'சந்திர மோகன்' 'அம்மையப்பன்' நாடகங்கள் உண்டு.**

வ. கு. தலைவர்; சி. வி. எம். அண்ணாமலை; செயலாளர்கள் : இரா. வெங்கடேசன், சே. கோ. பெருமாள், டி. சபாபதி; பொருளாளர் : ஆர். பாபு; தொண்டர் படைத் தலைவர்கள் : எத்துராசு, சிவானந்தம், ராஜரத்தினம், வகாப்.

# சாசனம்

## தென்னரசு

‘திராவிட நாடு திராவிடருக்கே’ — என்ற நமது ஜீவ லட்சியத்தை — இதயகீதத்தை இடித்துரைக்கும் அரசியல் விபீஷணர்களுக்கு இந்த வரலாற்றுக் கட்டுரையைப் படைக்கிறோம்—படித்துணர... (ஆ—ர்)

கோல மயில்கள் ஆடிடும் கோமகளின் பூங்கா. வண்டுகளின் மதுர கீதமும், வண்ண மலர்களின் நறுமணமும் அந்த முல்லை வனத்தின் சிறப்புக்கு முடி சூட்டியது. பிரான்சு நாட்டின் பிரதமர் மஜார் இங்கு மங்கும் உலாத்திக் கொண்டிருந்தான். புருவத்தின் நெளிவும், விழியும் மஜார் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டிருக்கிறார் என்பதை ஜாடையாகச் சொல்லிக் கொண்டிருந்தது.

“மஜார்!” எங்கிருந்தோ இப்படி ஒரு குரல் ஒலித்தது. கனவு கலைந்து கண்விழித்துக் கொண்டவனைப்போல திடுக்கிட்டுப் போய் குரல் வந்த திக்கை நோக்கினன் மஜார். வெள்ளைக்கலையுடுத்தி வெண்மயிலென ராணி ஆர்ட்ரிச்சா ஊர்ந்து வந்து கொண்டிருந்தாள்.

“மகாராணி!”

ராணி:—மகாராணி, என்று என்னை மறுமுறை அழைக்காதீர்கள் மஜார்.

மஜார்:— மன்னிக்கவேண்டுகிறேன். தாங்கள் பிரபுக்களின் தலைவி—பிரான்ஸ் நாட்டின் பெருமாட்டி. தங்களை மகாராணி என்று அழைத்தது தவறுதான். இனிமேல் எசமானி என அழைக்கிறேன்.

ராணி:— எஜமானி என்பது உண்மை, என்றாலும்———

மஜார்:என்றாலும்? சொல்லுங்கள்!

ராணி:—அடிமை!ஆமாம்,அடிமைதான் மஜார்!

ராணியின் இந்தக் குரலில் தாகம் படிந்திருந்தது. ஆசை வெறியாகமாறி சொல்லுக்குச் சொல் நர்த்தனம் புரிந்தது.

மஜார்:—அடிமையா? வயிறு வளர்க்கும் மஜாருக்கு வையகமாளும் வணங்கா முடியரசி அடிமையா? புதிர் விளங்க வில்லை பெருமகளே!

ராணி:—விளங்காது வீரரே விளங்காது! காதல் தென்றலை அனுபவித்தறியாத கட்டிளைஞர் நீர், நான் கணவனை இழந்த கைம்பெண், ஆனால் கயிற்றின் இழுப்புக்கும் அடங்காத ஆசையும்சபலமும் என்பேச்சில்கலந்திருப்பதை நீங்கள்எப்படி உணரப் போகிறீர்கள். மஜார், ஆடம்பர வாழ்வு நடத்தும் அரசகுல வாலிபர்கள் என் உருவத்தை அவர்களது உள்ளங்களிலே அழிக்க முடியாத அழகு ஓவியமாகப் பதித்திருக்கிறார்கள், எண்ணற்ற இளைஞர்கள் இந்த ராணியின்கண்ணசைப்புக்கு கட்டியம் கூற காத்துக் கிடக்கின்றனர், ஆனால் என்மனம் அவர்களை நாடவில்லை மஜார், மனதைத் திறந்து பேசுகிறேன்——உள்ளத்தைக் கிழித்துக் காட்டுகிறேன், மகரந்தத்தூள் படிந்திராத காகிதப்பூக்களை, வர்ணத்தில் மயங்கி வாரி எடுத்து நுகரும் வரட்டு மூளைக்காரியல்ல நான். மஜார், வஞ்சனை சூதற்ற என் கண்களைப் பாருங்கள், என்னுடைய எழில் முகம் ஏக்கத்தால் சூம்பிப்போய் சருகாகத்தான் வேண்டுமா?

மஜார்:— சாம்ராஜ்யமாளும் சக்கரவர்த்தினிக்கு சாதாரண மஜாரிடம் காதல்! கோலேந்தி கொலுமண்டபத்தில் வீற்றிருக்கும் பட்டத்துராணிக்கு வாளேந்திப் போர்புரியும்வீரனிடம் பிரேமை! அச்சம் பிறக்கிறது அரசியாரே!

ராணி:— இளமைத் தடாகத்திலே, அதுவும் பருவ எழிலில் மிதக்கும் வாலிபனுக்கா அச்சம்! காதல் தெய்வீகமானது மஜார்! தன்னலமற்றது.

மஜார்:— தேவி, காதலின் பெருமை பற்றிக் கூறும் பெருவாரியான ஏடுகளைப் புரட்டிப் பார்த்தவன் நான். ஆனால் காதலுக்காக உயிர் விட்டவர்களின் ஆவி' காதலை நம்பாதே நெஞ்சே' என்று ஒலிப்பது என் செவிகளில் வந்து மோதுகின்றனவே, என்செய்வேன் பெண் திலகமே.

ராணி:— மஜார், சாகும்வரை நீர் என் இதய விளக்கு—குல தெய்வம். பிரஞ்சு மக்கள் மீது ஆணையாகச் சொல்கிறேன்.

மஜாரின் உறுதி,கட்டழகியின் காதல் ஜுவாலையில் உருகி நீராக ஓடிப்போய்விட்டது. அரசிக்கு, அமைச்சன் என்ற தோரணையில் காட்டி வந்த மரியாதையும் அறவே ஒழிந்தது.

மஜார்:— உன் பொறுமையை எடைபோட்டு விட்டேன் பொற்கொடியே. வா, மாளிகையேகுவாம்.

ஃ ஃ ஃ

பதினைன்காம் லூயி இளமையிலேயே தந்தையை இழந்து விட்டான். பாலர் பருவத்திலிருக்கும் சிறுவனிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பது தகாது என்றெண்ணி அவனுக்குப்பதிலாக அவனது அன்னை பதவியேற்றாள். விதவை ராணியின் விரகதாபத்தை அடக்கக் கூடிய வீரனாக கோட்டைக்குள் நடமாடிக் கொண்டிருந்தவன் மந்திரி மஜார் தான்.

மஜார் மாவீரன் — ஆனால் மமதையாளன். இத்தாலி நாட்டிலிருந்து பிரான்சுக்குப் பிழைக்க வந்த மஜார், அவனது நாவசைத்தால் அது சட்டமாகக் கூடிய அளவுக்கு செல்வாக்குப்பெற்று எளிதில்அமைச்சனாகிவிட்டான். மஜாரின் ‘கப்சிப்’ ஆட்சியிலே கிளர்ச்சி செய்வோருக்குக் கிடைக்கும் தண்டனை, சாவுமேடை! சித்ரவதை! பாஸ்டிலி சிறை தண்டனை!

மாலைக் கதிரவன் மறைந்து, மாநிலத்தை இருள் கவ்வியவுடன் மஞ்சத்திலமர்ந்து மதுவருந்தி மகாராணியோடு மதுர மொழி பேசி மக்களின் வேதனைக் கண்ணீரை பன்னீராகத் தெளித்து அதிலே திளைத்து நிலைமறந்து, நிதானமிழந்து, காலத்தைக் கழிப்பதே மஜாரின் அந்தப் புரத்துத் திருப்பணி.

அரண்மனை ரகசியத்தின் லீலா விநோதங்கள் கண்ணாடி அறைகளைக் கடந்து, கோட்டை மதில் சுவர்களைத் தாண்டி மக்களின் காதுகளிலும் மோதத் தொடங்கின.

ஃ ஃ ஃ

கோண்டா!—

இவன் பெரிய புரட்சிக்காரன். ராணிக்கு நெருங்கிய உறவினன்-தம்பிமுறை. கோண்டாவுக்கு மக்கள் மன்றத்திலே குறைவில்லாத செல்வாக்கு! குன்றாத புகழ்! பிரஞ்சுமக்களிடையே இனப்பற்றை வளர்த்த தளபதி அவன்தான்,

“நாடோடியாக வந்த மஜார் நாடாள்வதா—நாடாளப் பிறந்தவர்கள் நலிந்து நடைப்பிணங்களாக அலைவதா” —“பிச்சைக்கார மஜாரே பிரான்சை விட்டு ஓடு” என்பன போன்ற லட்சிய கோஷங்களை இன முழக்க மாக்கியபெருமையும் கொண்டா வைத்தான் சாரும்-

தூசாக மதித்தோம் கொண்டாவின் கும்பலை; அது அசைக்க முடியாத தூணாக வேரூன்றி விட்டதே என்று அச்சம் மஜாரின் பின்னேடிகளுக்கும் மூளை விட்டது.

சொத்து மிகுந்தோரின் சூத்திரக்கயிறாக — சீமான்களின் செல்லப்பிள்ளையாக ஆடியாடிக் கொண்டிருந்த இத்த லிப மஜாரின் இதயத்திலே பிரான்ஸ் நாட்டின் இனப்பற்று பயங்கரச் சூறாவளியைச் சுழன்றடிக்கச் செய்தது. ஓடினான் ராணியிடம்.

மஜார்:—ராணி ஆபத்து! ஆபத்து!

ராணி:ஆபத்தா! அஞ்சாநெஞ்சன் மஜாரின் வாயால் உச்சரிக்கலாமா இதுபோன்ற சொற்களை!

மஜார்:—அரசியே, இன்னல் தருபவன் அங்கியனாக இருந்தால் அவனது கண்களைப் பிடுங்கி உங்கள் காலடியிலே போட்டிருப்பேன், அதற்கான மனோதிடம் இந்த மஜாரிடம் இல்லாமலில்லை, ஆனால் இப்போது நமக்கேற்பட்டிருக்கும் ஆபத்து அதுபோன்றதல்ல. உமது மக்கள் உரிமைக் கிளர்ச்சிதொடங்கி விட்டார்கள். இரும்புடை வீரர்களும் இனப் போரில் வெற்றி கண்டதில்லை சீமாட்டி

ராணி:—உரிமைப் போரா?

மஜார்:-ஆம்,ஊராளும் உரிமை எங்களைத்தான் சாரும்என்கிறார்கள் அவர்கள்.’

ராணி—கயவர்கள்! அந்தக் கலகக்காரர்களின் தலைவன்?

மஜார்— கொண்டா!

ராணி—கொண்டாவா மஜார், கொண்டாவைக் கைது செய்யக் கட்டளையிடுங்கள். அதோடு நகரில், நாடகமோ; கூட்டமோ நடத்தக்கூடாதென பறைசாற்றி விடச் சொல்லுங்கள்.

கொண்டா புரட்சிப் படைக்குத் தலைமை தாங்கும் செய்தி கேட்டவுடன் ராணிக்கு திகில்! இதய ராஜா மஜாருக்கு எங்கே ஆபத்து வந்துவிடுகிறதோ என்ற அச்சம்! மஜாரை ஜாக்கிரதையாக நடமாடும்படி அன்பு கட்டளை யிட்டாள். அந்தப் புரத்தைச் சுற்றி அடிக்கொரு வீரனை காவல் வைத்தாள்

கொண்டா கைது செய்யப்பட்டான். பாஸ்டிலியில் இருட்டறை ஒன்று அவனுக்கு வாசஸ்தலமாயிற்று.

ஃ ஃ ஃ

அர்ட்டாங்கன்! — பிரஞ்சுப் படையின் தலைவன்—ராணியின் பிரியத்திற்குப் பாத்திரமானவன். அரசாங்கத்தின் கட்டுக் காவல் மிகுந்திருந்தும் கொண்டாவின் லட்சியத்திலே அர்ட்டாங்கனுக்கு உயிர். என்றுமில்லாமல் அன்று மஜாரிடமிருந்து அர்டாங்கனுக்கு அழைப்பு வந்திருந்தது, தனித்த முறையில் வரும்படி.

மஜாரின் மாளிகையிலே அர்ட்டாங்கன் மஜாரைச் சந்தித்தான்!

மஜார்:— அர்ட்டாங்கா, பிரஞ்சு நாட்டின் மணிமுடிக்கு ஆபத்து வந்திருப்பதை நீ அறிவாயல்லவா! பிரஞ்சு நாட்டின்

[10-ம் பக்கம்]



# அறிமுகம்

★

சரித்திரத்தின் அடிச்சுவடுகள் தெளிவின்றி மறைந்து விட்டது போன்ற சூழ்நிலைகள். பழமையின் கதையைப் பரிதாபத்தோடு சொல்லிக் கொண்டிருக்கும் பாழ் மண்டபங்கள். கதிர் மறைக்க கிளைக் கரம் நீட்டும் தரு நிழல்கள். வான் தொடுவதற்கென்று வளைந்து நிமிர்ந்து பனங்காய்த் தலையைத் தொங்கப் போட்டு, தம் தோல்வியை சொல்லாமற் சொல்லும் பனைமரக்காடுகள். இவைகளுக்கிடையே வீழ்ச்சியிலும் கலங்காத வீர நெப்போலியனைப் போல உயர்ந்து நிற்கும் அந்த ஏழடுக்கு எழில்மாடம்; அந்த மாடத்தின் மடியிலே தவழ்ந்தாடத் துள்ளிவரும் கடலரசி. இரவு நேரத்து விண்பிறைக்குப் போட்டியென பகல் நேரத்தில் நீலக்கடல் ராணி தன்பால் மிதக்கவிட்டுக் காட்டும் பாய் கட்டிப் படகுகள்.

சாளுவ நாயக்கன் பட்டினம் அந்த ஊரின் பெயர். தஞ்சை மாவட்டத்திலே வாழ்பவருக்கே அது புதுமையான இடம். அதிராம்பட்டினத்திலிருந்து கடல் வழியே செல்லலாம். பேராவூரணியிலிருந்து நாடியம் என்னும் சிற்றூர் வழியாக தரைமார்க்கமாகவும் செல்லலாம். தமிழகத்தின் கடற்கரையில் அமைந்துள்ள சிற்றூர் பேரூர்கள் அனைத்திற்கும் பெரும்பாலும் “பட்டினம்” எனும் சிறப்புப் பெயர் வழங்குதலுண்டு. அதிராம் பட்டினத்திற்கும் சாளுவ நாயக்கன் பட்டினத்திற்கும் இடையே புதுப் பட்டினம் என்ற சிங்காரச் சிற்றூரும் இருக்கிறது. புதுப்பட்டினத்திலே பெருமளவுக்குகடலை நம்பி வாழும் மனிதர்களே வாழ்கிறார்கள். எந்த நேரத்திலும் அந்த சிற்றூரின் தெருக்களிலே வலைகள் காய்ந்து கொண்டிருக்கும், அல்லது பழுதான வலைகள் புதுமையாக்கப் படும் வேலைகள் நடந்து கொண்டிருக்கும் காய்ந்த மீனின் வாசம் ‘கமகம’வென்றுவந்துகொண்டிருக்கும். கட்டு மரங்கள்-படகுச் சாமான்கள் — தெருவெல்லாம் இரைந்துகிடக்கும். அவைகளில் சிறுர்கள் அமர்ந்து விளையாடிக் கொண்டிருப்பார்கள், நாலைந்து தெருக்களே உள்ள அந்தப் புதுப்பட்டினம் பார்வைக்கு அழகாகவும் ஓய்வு பெறுகிறவருக்கு உல்லாசமளிப்பதாகவும் இருப்பதற்கு காரணமே அந்தக் கடல் தான் என்றுகூறி விடலாம். முஸ்லீம் மக்களும் அந்த சிற்றூரில் வாழ்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்ட ஒரு சிறு மசூதி, அதன் எதிரிலே கட்டிவிடப்பட்டிருக்கும் துண்டுத் திண்ணைகள்தான் அந்த ஊர்க்காரர்களுக்கு கடற் காற்று வாங்கும் இடம், புதுப் பட்டினத்திற்கும், சாளுவ நாயக்கன்பட்டினத்திற்கும் அதிக தொலைவில்லாவிடினும் கடல் வழியாகப் போவதுதான் சுலபமான பயணம். சாளுவ நாயக்கன் பட்டினம் என்ற பெயர் அந்தப் பகுதி மக்களிடையே அதிகமாக அடிபடுவதில்லை. காரணம், பட்டினத்திற்குரிய அமைப்புகளோ-வீடு வாசல்களோ - தெருக்களோ— எதுவுமே அங்கு கிடையாது, அங்கே நிற்கும் அந்த ஏழடுக்கு மாடத்தின்பெயராலேயே அந்த இடத்தை அழைப்பது வழக்க மாகி விட்டது.

மனோரா! ஆம், சாளுவ நாயக்கன் பட்டினத்தைக் குறிக்கும் செல்லப்பெயர் அது தான், அந்த எழில் மாடத்தின் பெயர்தான் மனோரா! “மினூர்’, என்ற சொல், நாளடைவில் மனோரா என்று மாறியிருக்க வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் உள்ள நாகூர், முஸ்லீம்கள் வாழும் பிரதேசம். அங்குள்ள தர்க்காவில் எழுந்து நிற்கும் மாடங்களை மனோரா என்றே அழைப்பார்கள், அதே முறையில் இந்த மாடத்திற்கும் பெயர் சூட்டிவிட்டார்கள் போலும்! மனோரா-தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னனால் கட்டப்பட்டது. நெப்போலியன் ஆங்கிலேயரால் தோற்கடிக்கப்பட்டான் என்ற வெற்றிச் செய்தியை அறிவிக்கும் அடையாளமாக இந்த நினைவுச் சின்னம் எழுப்பப் பட்டது என்று தான் செதுக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் தெரிவிக்கின்றன,

ஆங்கிலேயரின் ஆதிபத்யம் ஆணிவேர் விடுவது கண்டு அஞ்சிய தஞ்சை மன்னன், அவர்களை எதிர்த் தொழிக்க ஒரு பாசறைக் கோட்டை— ஆம், போர்க்கோட்டை கட்டினுன் என்றும், அந்தக் கோட்டையிலே அவன் நினைத்தபடி ஏற்பாடுகள் நடப்பதற்கு முன்பே, செய்தி, ஆங்கிலேயருக்குப் பரவிவிட்டதென்றும்-வினு. எழுப்பிய வெள்ளையரிடமிருந்து த்தப்புவதற்



காகவே—இது வெற்றியின்சின்
னம்—என சரபோஜி மன்னர்
விடையளித்தார் என்றும் ஒரு
தேய்ந்து போன செய்தி உலவு
கிறது. எதிர்ப்பு முகாமோ—
அல்லது எதிரியின்வெற்றியைப்
புகழ்ந்திடும் மண்டபமோ—
தெரியாது; ஆனால் மனோரா
வின் அமைப்பு கண்ணைக்
கவருவதாக மட்டுமல்ல; படை
வீரர்கள் தங்கக் கூடிய கோட்
டையைப் போலவும் இருக்
கிறது, முழுதும் மர உத்திரங்
களும், பக்குவப்படுத்தப்பட்ட
சுண்ணாம்பும், அழுத்தமான
செங்கல்லும் கொண்டு கட்டப்
பட்ட கட்டிடம் அந்த
மனோரா. மர உத்திரங்கள்
கால வெள்ளத்தில் உளுத்து
விடக் கூடும் என்பதற்காக—
அவைகளில் கயிறுகளை சுற்றி
அதன் மீது கல் அடுக்கி சுண்
ணாம்பு பூசியிருக்கிறார்கள் என்
பது மனோராவில் பழுதடைந்
துள்ள பகுதிகளைக் காணும்
போது தெளிவாகும். சுண்
ணாம்பு உதிர்ந்து விட்டிருக்
கிறது. கல் உடைந்து போயி
ருக்கிறது. மரத்தில் சுற்றப்
பட்ட கயிறு மட்டும்இன்றைய
தினம் திரிக்கப்பட்ட கயிறு
போலத் தெரிகிறது. மனோரா
விலே ஒரு பாதாளாக் குகை
யிருந்து மூடப்பட்டுவிட்ட
தாக—அந்தக் குகையிருந்த
அடையாளத்தையும் உத்தேச
மாகக் காட்டுவார்கள். அந்தக்
குகையில் நுழைந்தால் அருகே
உள்ள மருங்கப் பள்ளம் என்ற
ஊருக்கு போக முடியுமாம்.

'மருந்துப் பள்ளம்' தான்
மருங்கப்பள்ளமாகி விட்டது
என்று ஆதாரப் பூர்வமாக நிரு
பித்துக் காட்டுகிறவர்கள் அந்
தப் பகுதியிலே பலர் இருக்கி
றார்கள்.

பொன் குட்டம் எனப்படும்
கல் அங்கே ஏராளமாகக்
கிடைக்கிறது. பொற்கொல்
லர்கள் பொன்னை உருக்கு
வதற்காக உபயோகப்படுத்தும்
ஒருவித மணலில் தங்கப்
பொடிகள் உருகி, சிந்தி, கெட்
டிப் பட்டுப் போய் அது கற்
கள் போல மாறிவிடுகிறதாம்,
அந்தக் கல் மருங்கப் பள்ளம்
கிராமத்திலே எங்கு நோக்கி
னும் கிடக்கிறது. அந்தப்
பொன் குட்டக்கல்லை எடுத்து
அதிலே மருந்து செய்து,
ரத்தம்—சோகை பாண்டு—
முதலிய நோய்களுக்குக்
கொடுத்து குணப் படுத்து
கிறார்கள். அதன் காரணமாக
அந்த மருங்கப்பள்ளம் மருந்துப்
பள்ளம் என அழைக்கப்படு
தலே சிறந்தது எனக் கூறுவர்
அங்குள்ளோர்.

மற்றொரு ஆராய்ச்சியும்
அங்கேநடைபெற்று, இன்னும்
முடிவு காணாமல் கிடக்கிறது.
எத்தனையோலட்சம்பெறுமான
முள்ள பொன் அந்தஊரில் எங்
கேயோ ஒரு மூலையில் புதைந்து
கிடக்கிறதாம். அது எங்கே
தோண்டினால் கிடைக்கும்
என்று திட்ட வட்டமாகத் தெரி
யாமல் பெரியதோர் திகைப்பே
ஏற்பட்டிருக்கிறதாம்.

# கருணாநிதி

பொன் குட்டம் இவ்வளவு
அதிகமாகக் கிடைப்பதற்குக்
காரணம் என்ன? பொற்கொல்
லர்கள் பலர் பொன்கட்டிகளை
அந்த இடத்திலே உருக்கி
யிருக்க வேண்டும். அப்போது
உருகி உருவான பொன் குட்
டங்கள்தான் மருங்கப் பள்ளம்
முழுமையும் சிதறிக் காணப்
படுகின்றன, என்று தங்களது
சிந்தனையின் விளைவைக் கூறிக்
கொண்டிருப் போருமுண்டு,
"செவத்தான் மகள் கருப்பாயி,
எலுமிச்சம் பழம் நிறத்துக்கு
இருக்கிறாள்னு ஊரெல்லாம்
வர்ணிச்சுகிட்டு கிடந்தது;
கடைசியிலே பாக்கப்போனா
அவளுக்குப் பாண்டு ரோகம்,
அதனாலதான் அப்படி வெளுத்
துப் போய் இருக்கிறான்னு
வைத்தியர் சொன்னாரு—
கொடுக்காத மருந்து பாக்கி
யில்லை—கடைசியிலே பொன்
குட்டத்திலே ஒரு மருந்து
தயார் பண்ணி சாப்பிட்டு
கிட்டே வந்தது—இப்ப கருப்
பாயி- கட்ட பொம்மன் சம்சா
ரம் மாறி ஆயிட்டா — கல்யா
ணம் ஆகி புள்ளையும் பெத்
துட்டா—" என்ற உரையா
டல் மருங்கப் பள்ளத்து திண்
ணைப் பேச்சுக்களின்போது
எப்போதாவது ஒரு முறை
நடைபெற்றுக் கொண்டு
தானிருக்கும், சாலையிலே
நடந்து செல்கிறவர்கள்
காலிலே தட்டுப்படும் கல்,
பொன் குட்டக்கல்லாக இருக்
கக் கண்டு விட்டால், அதன்
பெருமையைப் பற்றி ஆளுக்
கொரு கதை கூறிக் கொண்டு
தங்கள் வழிப்பயணத்தை சிர
மம் இல்லாமல் முடித்துக்
கொள்வார்கள்.

இப்படி யெல்லாம் அந்தப்
பொன் குட்டக்கல், அபரிமித
மான பொன் குவியல்கள்
அந்த இடத்து மண்ணிலே
புதைந்து கிடக்கின்றன என்ற
அந்தரங்கத்தை அறிவித்
துக் கொண்டிருக்கிறது என்
பது மட்டு மல்லாமல்
அந்த ஊரின் வயல் வெளி
களுக்கிடையே அமைந்த மாரி
கோவிலில் உள்ள சில வரிகள்
பொன் புதைந்து கிடக்கும்
செய்தியை இன்னும் அழுத்த
மாக ஊர்ஜிதப்படுத்துவதாக
வும் பேசிக் கொள்கிறார்கள்.

"எழுவானுக்கும் தொழு
வானுக்கும் இடையிலே

காக்கை மூக்கு நிழலிலே......

கண்டாலும் "கம்மாளர்" கண்
ணிலே"

என்பதுதான் அந்த வரிகள்,
எழுவான் என்றால் யார்?
தொழுவான் என்றால் யார்?
காக்கை மூக்கு நிழல் என்பதற்
குப் பொருள் என்ன? "கம்மா
ளர்" என்பது பொற்கொல்
லரை மட்டும்தான் குறிக்குமா?
இது போன்ற கேள்விகள்
லட்சக் கணக்கான பொன்
களைப் பற்றிக் கனவு காண்ப
வர்களின் உள்ளத்தில் எழத்
தானே செய்யும்! அப்படி
எழுந்த நினைவு அலைகள் எப்
படியும் அந்தப் பொற்குவியல்
களுக்கு, தான்—ஏகச் சக்ராதி
பதியாகிவிட வேண்டுமென்ற
பச்சை சுய நலத்தை ஒரு சில
மனிதர்களுக்கு பெருக்கிடும்
தன்மை வாய்ந்தவை என்
பதை யார் மறுத்துக் கூற
முடியும்?

இரவு நேரங்களிலே —
நிலவைக்காணமுடியாத இருள்
வேளைகளிலே—கையிலே மண்
வெட்டி கொண்டு எத்தனை
எத்தனை ஆசைக்காரர்கள்
தாங்கள் பூவைத்துப் பார்த்து
உத்தேசமாக உறுதிப் படுத்
திக்கொண்ட பகுதியிலே
தோண்டிப் பார்த்து—பொன்
குடங்களை காணாமல் ஏமாந்தி
ருக்கிறார்களோ — யார்
கண்டது!

இப்படிப் பலருக்கு ஆசை
காட்டியும்—பலரை ஏமாற்றி
யும்—பலரால் சிறப்பிக்கப்பட்
டும் — சிரமத்தை சுமந்து
தோற்றுவிட்ட சிலரால் சபிக்
கப்பட்டும்—தனித் தன்மை
பெற்றுவிட்ட அந்த மருங்
கப்பள்ளம் காண்பதற்கு அழ
கான ஊர். சிறியதோர் சாலை-
அதன் ஓரத்திலே வயலுக்கு
உயிர் வழங்கும் வாய்க்கால்
அந்த வாய்க்காலின் கரை
களிலே புறாக்கூடு போன்ற
ஓலைக் குடிசைகள். பச்சைப்
பட்டாடை விரித்து இயற்கை
யன்னை எழில் கொட்டி மகிழ்
ஆட்டும் பூமி அந்த மருங்கப்
பள்ளம்- பிரச்சினைக்குரிய
பிரதேசம்.

• அதிராம்பட்டினம் — புதுப்
பட்டினம் — சாளுவநாயக்கன்
பட்டினம் — மனோரா—மருங்
கப்பள்ளம் — பேராவூரணி —
நாடியம்—ஆகிய ஊர்களையும்,
பகுதிகளையும் நாம், இப்போது
அறிமுகப்படுத்திக் கொண்டிருக்
கிறோம். இந்த இடங்களில் சுற்
றிச் சுழன்று—கடல் தாண்டி,
இலங்கைக் கரையில் மோதித்
திரும்பும் ஒரு சில மனித
ஜீவன்களின் கதைக்கு நாம்
அறிமுகப் படுத்திக்கொண்ட
இந்த இடங்கள் பெரிதும்
உதவும்.

[ வளரும் ]

★





Filmed as bound

# மின்னல் தரும் ஓசை!

(கவிஞர் சுரதா)

**பெண் :** முற்றிக் கனிந்திட்ட கோவை ப்பழம்போல
முன்பே சிவந்த உதடுகளை,
வெற்றிலை போட்டின்னும் ரத்தப் படுத்துதல்
விவேக மாகுமோ காதலரே?

**ஆண் :** வண்டு படுத்து உறவாடும் தாமரை
வண்ணச் சிவப்பு முகத்தினிலே;
வண்ணக் கிளிப்பிள்ளை வாய்நிறம் போல்பொட்டு
வைப்பது மட்டும் சரிதானா?

★

**பெண் :** மிதக்கு நிலாமுக மங்கையின் உதடு
மென்று தின்கின்ற கற்கண்டு என்றால்
இதுவரை எத்தனை முத்தமிட்டும் அவை
இன்னும் கரையாதிருப்பது ஏன்?

**ஆண் :** வெட்டிய மாப்பிஞ்சு போன்ற விழியினால்
'வாருங்கள்' என்று இழுப்பவளே!
சுட்ட கொழுக்கட்டை மேல்கலத் தண்ணீரைக்
கொட்டினும் மாவு கரைந்திடுமோ?

★

மாதவிபோல அழகு படைத்துள்ள
மாணிக்க தீபமே! ஆணிப் பொன்னே!
மின்னல் இருக்க, இடைதனிலே, ஓசை
மட்டும் இல்லாது இருப்பது ஏன்?

**பெண் :** கொட்டிக் கிடக்கின்ற முத்'தெடுத்து' நாவில்
கோத்த சரம்போல் சிரிப்பவரே!
ஒட்டு மாங்கனியின் கன்னத்தைத் தாருங்கள்
ஓசையை உண்டாக்கிக் காட்டுகிறேன்!

# தேவ கட்டளை?

★

"அய்யர் படுத்த படுக்கையாகக் கிடக்கிறாராமே, அவர் செய்திருக்கிற தியாகத்திற்கு ஒரு சித்தெரும்பு கூட அவரை கடித்திருக்கக் கூடாதே" என்று உடல் நலிவுற்றிருக்கும் மதுரை வைத்திநாதய்யர் நிலை குறித்து காங்கிரஸ் கம்பு தூக்கிகள் வட்டாரத்தில் பேசிக் கொள்ளப்பட்டது. ஆனால் கடந்த 5-ம் தேதி வைத்திநாதய்யர், நண்பர்களுக்கு அனுப்பியுள்ள கடிதங்களில் "ஏழைகளுக்கு என் தொண்டு இன்னும் தேவை என்று கருதி தெய்வம் எனக்கு அருள் புரிந்துகுணமாக்கி விட்டது" என்று சொல்லியிருக்கிறார். மதுரையிலிருந்து சென்னை மருத்துவ நிலையத்திற்கு அவரைக் கூட்டி-இல்லை-தூக்கி வந்த நிலையை மறந்து, டாக்டர்களின் திறமைக்கு திரையிட்டு எல்லாம் ஆண்டவன் செயல் என்று சொல்லியிருக்கிறார், அந்த காந்தியவாதி. அப்படியானால், ஆகஸ்ட் 15-ம் தேதியன்று அவருக்குக் கொடுக்க இருந்த 'பாரத ரத்னா' பட்டத்தைக் கொடுக்க வேண்டாமென மேலிடத்திலிருந்து கட்டளை வந்திருக்கிறதாமே, அதுகூட தேவ கட்டளை தானா? "வைத்திநாதய்யர் தியாகியில்லை—எனவே பட்டம் பெற அவர் தகுதியில்லை" என டில்லிக்கு தேவதை கட்டளையிட்டு விட்டதா? தேவ கட்டளையாம், தேவகட்டளை!

# குறளோவியம்

●

அழகு சுமந்து வரும் பெண்ணை பருவச் சுமையால் கனத்துப் போன இருதயம் படைத்த ஒரு வாலிபன் பார்க்கிறான். பார்த்தவன் தன் பாதையில் போவது தானே நியாயம். அந்த அழகியின் மீது பழி கூறிவிட்டுப் போகாவிட்டால் அவனுக்குத் தூக்கம் வராது போலும். மனித வழக்கமே அப்படித்தான் ஆகிவிட்டது. வானத்தில் தவழும் நிலவைப் பார்த்து, "ஏ, நிலவே—ஏன் என்னை இப்படி தகிக்கிறாய்?" என்று கோபித்துக் கொள்வான், சலசலவெனப்பாயும் நீரோடை நிலங்கிழித்துச் செல்வதை பொறாமைக் கண்களோடு மனிதன் பார்த்து வயிற்றெரிச்சலை வெளியிடுவான். நான் வருந்தும்போது நீரோடை இப்படி இசைபாடிச் செல்வதா? என்று கவிதா உள்ளத்தோடு வசைபொழிவான். அத்தகைய ஒரு இளைஞனைத்தான் இதோ நம் கண்முன்னே—மன்னிக்கவும்-ஒரு மங்கையின் கண்முன்னே நிற்கவைத்து கதறவைக்கிறார், வள்ளுவப் பெருந்தகையார்.

"கொடுமை பொருந்திய புருவங்கள் கோணுதல் இல்லாமல் தடுக்குமானால், இவளுடைய கண்கள் என்னை நடுங்கவைக்கும் அளவுக்கு என் மீது பாயமாட்டா!"

அவளது பார்வையில் பட்டுத்தெறிக்கிறதாம் அவனது பருவ நெஞ்சம். அந்த இன்ப வேதனையில் புலம்புகிறான். "அய்யகோ—அணை சரியாகப் போடப்பட்டு, தடுக்கப்பட்டிருந்தால் விரகதாப வெள்ளம் என்னை மூழ்கடித்திருக்காதே" என்ற கருத்திலே கூறுகிறான்; அவள் சுந்தர விழிகளை அவள் புருவங்கள், சுவர் போலத் தடுத்திருக்கக் கூடாதா என்று! வள்ளுவர் நடையில் அதைப் படியுங்கள்.

"கொடும் புருவங் கோடா
மறைப்பின் னடுங்கஞர்
செய்யல மன்னிவள் கண்."

நடுங்கு அஞர் செய்யல—நடுக்கம் தரும் துன்பத்தை செய்யமாட்டா என்பது பொருள்.



களங்கம் இருக்கிறது என்பதற்காக நிலவைப் பழிப்பாரில்லை.

முள் உண்டு என்பதற்காக ரோஜா மலரை வெறுப்பாரில்லை.

## புதுமை

இப்படித்தான் உதாரணங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம்.

இதோ ஒரு புதிய உதாரணம் கேளுங்கள். பழையதுதான்; ஆனாலும் புதுமை நிறைந்தது. யசோதர காவியம் என்னும் நூலில் உள்ள அவை யடக்கத்தில காணப்படும் உவமையிது! அனலுக்குள்ளே புகையொழுங்கு இருக்கிறது என்ற காரணத்திற்காக விளக்கை வெறுப்பாருண்டோ?

விளக்கு எரியும் போது அந்தசுடரில்புகையும்மறைந்திருக்கிறது. அதற்காக விளக்கை வெறுத்தலாகாது. அதைஇதோ அழகாகக் கூறுகிறான் புலவன்.

"உள் விரிந்த புகைக் கொடியுண்டென எள்ளுகின்றனரில்லை விளக்கினை"

பெயர் தெரியாத புலவரின் பெருமை மிகு உவமை எப்படியிருக்கிறது பார்த்தீர்களா?

— கருணை —




# மந்திரமல்ல; தந்திரமே!

★

## சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

இலங்கையிலிருந்து ஒரு தங்கை கடிதம் எழுதியிருக்கிறது. அதனுடைய பள்ளிக்கூடத்திற்கு 'மந்திரவாதி' என்று சொல்லிக்கொண்டு ஒருவர் வந்தாராம். சில நம்ப முடியாத செயல்களைச் செய்து காட்டினாராம். 'தெய்வ சக்தி'யால்தான் அவைகளைச் செய்வதாகவும் சொன்னாராம் —இதை நம்பலாமா என்று கேட்டிருக்கிறது அத்தங்கை.

எப்படி நம்புவது? மந்திரம் என்பது தந்திரம்; பெரிய சூது! ஒரு கதை—கதை அல்ல; உண்மையாகவே நடந்த சம்பவத்தைச் சொல்லுகிறேன், கேளுங்கள்,

தூத்துக்குடிக்கு அருகிலே ஒரு சாமியார் இருந்தார். தன்னுடன் ஆண்டவன் பேசுவதாகவும், தனி சக்தியைத் தந்திருப்பதாகவும் சொல்லிக் கொள்வார். மக்கள் மூக்கில் விரலை வைக்கும்படி ஒரு செயலையும் செய்து கொண்டிருந்தார்.

அந்த ஆச்சரியமான செயல் என்ன தெரியுமா? ஒரு கிணற்றில் இரண்டு சேர் பாலை ஊற்றுவார். அதே பாலை, எவ்வளவு தூரத்திலிருந்தாலும் மற்றொரு கிணற்றிலிருந்து எடுப்பார். கேட்க வேண்டுமா மக்களுக்கு? இத்தனைக்கும்அவர் இரண்டாவது கிணற்றில் இறங்கும்போது பாலை எடுத்து வர தனது சொந்த சொம்பை உபயோகிக்கமாட்டார்; வேறு யாரிடமிருந்தாவதுதான் இரவலாக 'காலி' சொம்பை வாங்கிக் கொள்வார். உடம்பிலும் ஒரே ஒரு சாதாரண தேங்காய்ப்பூ துண்டைத்தான் 'டர்க்கி டவல்' என்பார்களே— அதைத்தான் கட்டிக் கொள்வார். மக்கள் வியந்தார்கள். எங்கேயோ கிணற்றில் ஊற்றிய பாலை, வெகு தூரத்துக்கப்பால் வேறொரு கிணற்றிலிருந்து எடுப்பதென்றால் சாமான்யமா?

சாமியாருக்கு காணிக்கை குவிந்தது; காலடியிலும் பலர் விழுந்தார்கள்,

சாமியாரின் 'தெய்வசக்தி'யை நம்பாத தம்பி ஒருவன் இருந்தான். அய்யாசாமி என்று பெயர்; குறும்பன்; படுசுட்டி! அவனுக்கு சாமியாரின் தந்திரத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று ஒரே ஆவல்; அதே வேலை!

ஃ ஃ ஃ

ஒரு நாள் சாமியார் ஓரிடத்தில் தனது கைவரிசையைக் காட்டிக் கொண்டிருந்தார். கிணற்றிலிருந்து, பிரித்தெடுத்த பாலை எடுத்துக் கொண்டு மேலே வந்தார், கூடியிருந்த பெரும் கூட்டத்தில் ஒரே ஆரவாரம்,

அங்கே வந்து சேர்ந்தான் நமது தம்பி அய்யாசாமி, சாமியாரின் பக்கத்திலே போனான், சொம்பை வாங்கிப்பார்த்தான். "என்ன சாமியாரே! இரண்டு சேர் பாலில் கொஞ்சம் குறைகிறதே! மீதத்தை நான் போய் எடுத்துவருகிறேன்" என்று சொன்னான், சாமியார் ஏளனமாகச் சிரித்தார். அவருக்கு எப்படித் தெரியும், தன் குட்டு அந்தச் சுட்டிப் பையனிடம் சிக்கிவிட்டது, என்பது? தம்பி பாலைக் கீழே ஊற்றினான். சொம்பைக் காலி செய்து கொண்டான், சட்டைகளை கழட்டினான். சாமியார் கட்டியிருந்தது போலவே ஒரு துண்டைக் கட்டிக் கொண்டான். கிணற்றிலும் இறங்கிவிட்டான்.

பத்தே நிமிஷத்தில் மேலே ஏறினான். அத்தனை பேரும் ஆவலோடு பார்த்தார்கள்—சொம்பிலே பால்!

சாமியார் விழித்தார்,—"எப்படி? எப்படி?" என்று ஒரே கூக்குரல்!

"எல்லாம் இதன் தயவால் தான்!" என்று சொல்லிக் கொண்டே, தான் கட்டியிருந்த ஈர தேங்காய்ப்பூ துண்டைக் காட்டினான் தம்பி, சாமியாரின் 'சக்தி'யையும் விளக்கினான்,

"இந்த சாமியார் ஒரு சாகசக்காரர்! சொல்லுகிறேன் கேளுங்கள்; அவர் இந்த வேலையைச் செய்வதற்கு முதல் நாளே, தான் கட்டியிருக்கிற தேங்காய்ப்பூ துண்டை பாலில் நனைத்து வெய்யலில் காயவைத்து விடுவார், மறுநாள் இரண்டாவது கிணற்றில் இறங்குவாரல்லவா, அப்போது தான்கட்டியிருக்கும் துண்டை தண்ணீரில் நனைத்துப் பிழிவார், முதல் நாள் துண்டோடு காய்ந்து போன பால் அப்போது வெளிப்படும், சாமியாரும் அந்த 'மறு பிறப்பு' பெற்ற பாலோடு மேலே வருவார். இதுதான் வேலை; புரிகிறதா! என்று சொன்னான்,

சாமியார் ஏன் அங்கே நிற்கிறார்? நின்ற இடம் காலி!

அந்தத் தம்பி சொன்னதில் பொய் ஒன்றுமே இல்லை! நீங்களும் முயற்சிக்கலாம்; வெற்றியும் கிடைக்கும்; இப்போது நீங்களே சொல்லுங்கள், இம்மாதிரியான மந்திரங்களை நம்பலாமா, கூடாதா?

— கட்டபொம்மன்

## தம்பிகள் சொல்லும் :: 'தாராள'ப் பொய்கள்!

- அப்பப்பா! இந்தப் பரிட்சையிலே தேருவதற்குள் என் உயிரேபோய்விட்டது!
- அடடா! என் அம்மா ஊருக்குப் போனதும் போதும் எனக்கு ஒவ்வொரு நிமிஷமும் ஒரு யுகமாகப் போகிறது.
- ஒரு ரூபாய் பணத்துக்காக என் அப்பாவிடம் தலை கீழே நின்றேன் இத்தனை நேரம்!
- அந்தக் கம்ப ராமாயணம் எவ்வளவு கடினமானது தெரியுமோ, படித்துப் படித்து என் தொண்டையே கிழிந்து விட்டதுபோயேன்!
- கடற்கரைக்குப் போனேன். என்ன காற்று; சிண்டையே பிய்த்துக் கொண்டு போய்விட்டதே!
- கணக்குப் போடாமல் பள்ளிக்கூடம் போனேனா, ஆசிரியர் பெஞ்சின் மேல் நிறுத்தி விட்டார்; அதை ஏன் கேட்கிறாய், நின்று நின்று என் காலே ஒடிந்து விட்டது!

## சிறிய வயதிலே

### பிரஜையில்லா பிரசங்கம்

இரவு பன்னிரண்டு மணி! நடு நிசி—கும்மிருட்டு! நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்த அம்மா, திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். அவளை எழுப்பியது என்ன தெரியுமா? ஒரு பயங்கர சப்தம்,

அம்மாவுக்கு ஒரே பயம்! உற்று கவனித்தாள். சப்தம் ஓயவில்லை. ஒரே ஓலம்! 'குய்யோ முறையோ' என்ற கூக்குரல்! காட்டுக் கூச்சல்! சப்தம் எங்கிருந்து வருகிறது என்று அம்மா கவனித்தாள். மறுகணம் 'ஐயோ' என்று அலறியே விட்டாள். ஏன் தெரியுமா? சப்தம் அவளுடைய மகன் படுத்திருந்த அறையிலிருந்து வந்து கொண்டிருந்தது. கேட்குமா மனது! தனது குழந்தைச் செல்வம் ஏதோ ஆபத்தில் சிக்கி விட்டது என்று நினைத்து விட்டாள். ஒரே ஓட்டமாக ஓடினாள். மகனின் அறைக் கதவை வேகமாக இடித்தாள். தாளிடப் பட்டிருந்த கதவு 'படார்' என்று திறந்து கொண்டது.

உள்ளே பார்த்தாள், "மகனே" என்று அலறிக் கொண்டு. அங்கே!... அவனுடைய செல்வ மகன், கண்ணாடிக்கு எதிரில் கட்டிலின்மேல் ஏறி நின்று கொண்டு, கையையும் காலையும் ஆட்டிக் கொண்டு தானாகவே சப்தம் போட்டுக் கொண்டிருந்தான்.

அம்மா அவனை நிறுத்தி, 'அப்பப்பா! என்னடா இது?" என்று துடிப்புடன் கேட்டாள்.

"என்னவா? ஒத்திகை! நான் இந்த நாட்டின்பிரதம மந்திரியாகிவிட்டால், கூட்டங்களில் எப்படிப் பேசுவதாம்? அதற்காகத்தான் பேசிப் பழகுறேன்" என்றான் அந்தத் தம்பி.

அம்மாவுக்கு பயம்அடங்கிறது; 'குபீர்' என்று சிரித்து விட்டான். உங்களுக்கும் சிரிப்பைத் தருகிற அந்தத் தம்பி யார் தெரியுமா? அவன்தான் தனது சின்ன வயதுக் கனவை நனவாக்கிக்காட்டிய வீரன்- இத்தாலி நாட்டின் முரட்டு சர்வாதிகாரி—முசோலினி!

பெரிய மனி

# திராவிடத்தின் 'மஜார்'கள்....

[ 5-ம் பக்கம் தொடர்ச்சி ]

நலத்திலே உனக்கு அக்கரை மிக உண்டு என நினைக்கிறேன்.

அர்:— உண்டு அமைச்சரே.

மஜார்:— என்னைப் பற்றி தப்புக் கணக்குப் போட்டு விட்டாய். உன் தாய் நாட்டை உருக்குலையச் செய்யும் உதவாக்கரைகளை ஒடுக்கவாவது ஒத்துழைக்க மாட்டாயா என்று தான் கேட்கிறேன்.

அர்ட்:— மனச் சான்றுக்குப் புறம்பாக இல்லாதிருந்தால் இட்டபணியைச் செய்து முடிக்கத் தயார்.

அர்ட்டாங்காவின் நீதி வாக்கியங்கள் மஜாரின் கோபத்தைக் கிளறின.

மஜார்:— அர்ட்டாங்கா, உன்னுடைய அறநெறி பார்க்கத் திற்குஇதுவல்ல இடம். மூளுகின்ற எதிர்ப்பை முறியடிக்க ஆளுகின்ற கட்சி ஏவும் போது அகிம்சையையும், சத்தியத்தையுமா துணைக்கழைப்பது? வேண்டுகோள் அல்ல வீரனே கட்டளையிடுகிறேன், சிறையிலே, கொண்ட்டா செய்யும் கொட்டத்தை அடக்கவேண்டும்— அவனுடைய " கோமாளிக்கூத்தை ஒடுக்க வேண்டும்— அதற்கேற்ற சிறைக் காவலன் தேவை-நம்பிக்கைக்குப் பாத்திரமானவனை இருக்க வேண்டும் அவன்.

அர்ட்:—ஆகட்டும் அமைச்சரே.

கொண்ட்டாவுக்கு சிறைக்காவலனை நியமிக்கப்பட்டவன் ஒரு திக்குவாயன்— கொண்டாவுக்கு ஒரு காலத்தில் மறைமுகமாக உதவி செய்தவன்—பெயர் கிர்மாடன். கிர்மாடன் தனது சிறைக்கு துணைவனாக வந்தது கொண்ட்டாவுக்கு பெருந்துணையாக இருந்தது.

பகலவனைப் பார்க்கமுடியவில்லை கொண்டாவால், பால் நிலவு மறைக்கப்பட்டது — என்றாலும் நாழிகைகள் ஓடிக்கொண்டிருந்தன — நாட்களும் உருண்டன.

கொண்டாவுக்குக் கொடுக்கப்பட்ட சிறை உணவு கொஞ்சமும் சுவையற்ற மரத்தூளாக இருந்தது. அவன் லட்சியவாதியனாலும், எத்தனை நாட்களுக்குத்தான் சத்தற்ற உணவைச் சாப்பிட்டுக் கொண்டிருக்க முடியும். "ஏ மஜார், மடிப்பிச்சை, எடுத்து வாழ்ந்தவனே, எத்தனை நாட்களுக்குத்தான் உன் ஆட்சி என்று பார்க்கிறேன்" என்று கர்ஜித்தான் கொண்டா— அந்த கம்பீர மான குரல், இருட்சிறையில் ஒட்டிக் கொண்டு தொங்கிய வௌவால்களைத் துடிக்கச் செய்து, காவலர்களையும் கலங்கடித்தது. மறுநாளே, கொண்டாவுக்கு வெளி உணவு கொடுக்க கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

கொண்டா பெரிய பந்தாட்டக்காரன்—களறிகளில் இறங்கி வெற்றி பல பெற்றவன். மகாராணி ஆர்ட்டிச்சா கொண்டாவுக்கு மட்டும், மாலையில் பந்தாட அனுமதித்திருந்தாள். ஆனால் கிர்மடானைத் தவிர வேறுயாரும் கொண்ட்டாவுடன் பேசக்கூடா தென்றும் ஒரு கண்டிப்பான கட்டளை பிறப்பிக்கப் பட்டிருந்தது.

கொண்ட்டா பந்து விளையாடிக் கொண்டிருக்கிறான். உடன் விளையாடிக் கொண்டிருந்த கிர்மாடன் பந்தை ஓங்கி அடித்துவிடுகிறான்—பந்து, பாஸ்டிலியின் கோட்டையைக் கடந்து வெளியில் வந்து விட்டது. கிர்மாடனுக்குத்தான் எங்கும், போகவும் அதிகார முண்டாகையால் அவன் சிறைக்கு

## ஓடப்போவது எந்நாளோ.....?

வெளியே வந்து பந்தை எடுத்துப் போனான் — சற்று தாமதமாக—ஆனால் முகமலர்ச்சியோடு!

"என்ன கிர்மாடா, நகரைப் பார்த்து விட்டதின் அறிகுறி உன்முகத்திலே பிரதி பலிக்கிறதே"

"உஸ்—ஸ்" என்று சொல்லி கொண்டாவை பக்கமழைத்து ஒரு காகிதச்சுருளைக் கொடுத்தான், கிர்மாடன். கொண்ட்டா கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான். அதில்,

கொண்டாவுக்கு வணக்கம். இன்றிரவு தங்களை தப்புவித்து வைப்பதற்காக ஏற்பாடுகள் அனைத்தும் செய்திருக்கிறேன். வேல் தாங்கிய வீரர்கள் பலரையும், வேகமான குதிரைகளையும் கோட்டைக்கு அருகே அமர்த்தி வைத்திருக்கிறேன். தங்களின் தற்காப்புக்காக, ஒரு ஆயுதமும், மதுவும் அனுப்பி வைக்கிறேன். ஜாக்கிரதை! வணக்கம் அன்பன்

பிரஞ்சுப் பிரஜை

அன்றிரவு!

வழக்கம்போல் கொண்டாவுக்கு வெளியிலிருந்து சாப்பாடு வந்தது. சாப்பாட்டில் விலையுயர்ந்த திராட்சை ரசமும், நீண்ட கனமான ரொட்டித்துண்டும் ஓர் ஆயுதமும் இருந்தன.

"இந்தா, இன்று ஆசைதீர குடித்துக்கொள்" என்று மதுக்கலயத்தை காவலாளியிடம் கொடுத்து விட்டான் கொண்ட்டா.

காவலன் குடி மயக்கத்தில் சோர்ந்து விழுந்தான். நடுநிசி! சிறை முழுதும் அமைதி! கொண்ட்டா ரொட்டியைப் புட்டான். அதற்குள்ளே கூர்மையான வாள் ஒன்றிருந்தது. அன்றிரவே கொண்ட்டா தப்பி விட்டான்.

மறு நாள் காலை வேல் பாய்ந்த வேங்கை போல மஜார் இங்குமங்கும் உலாத்திக் கொண்டிருந்தான்.

"யாரங்கே?"—கொண்ட்டா கூவினான்.

இரு சேவகர்கள் மஜார் முன் நின்றனர்,

"அர்ட்டாங்கனை கையோடு அழைத்துவா"

"அர்ட்டாங்கன் இரண்டு நாட்களாயிற்று அரண்மனைக்குவந்து, படை வரிசைகளைப் பார்வையிடக் கூட இரண்டு நாட்களாக வரவில்லை' என்றான் ஒருசேவகன்.

அப்போதுதான், அர்ட்டாங்கன் அன்றொரு நாள் தன்னை எதிர்த்துப் பேசியது மஜாருக்கு நினைவுக்கு வந்தது.

"எங்கிருந்தாலும் அவனைக் கட்டி இழுத்து வாருங்கள்" என்று ஆத்திரத்தோடு உத்தரவு பிறப்பித்தான் மஜார்.

அப்போது, "வேண்டாம் மந்திரியாரே, அவர்களுக்கேன் இந்தத் தொல்லை? இதோ நாங்களே வந்துவிட்டோம்" என்று ஒரு வீரக்குரல் கோட்டை வாயில் பக்கமிருந்து பாய்ந்து வந்தது. அரியாசனத்தில் அமர்ந்திருந்த ராணி திடுக்கிட்டாள். கொண்டா பேசினான்:—

மஜார் அவர்களே, உங்கள் ஆட்சியை நாங்கள் வெறுக்கிறோம். ஆகவே ஆட்சிப் பொறுப்பை எங்களிடம்—இந்த நாட்டுக்குச் சொந்தமான வர்கத்திடம் ஒப்படைக்கக் கோருகிறோம். பிரஞ்சுநாடு—பிரஞ்சு மக்களுக்கே' என்று சுதந்திர சாசனமெழுதி அதில் சக்கரவர்த்தினி கையொப்ப மிட்டுத் தர வேண்டும்—இதுவே எங்கள் வேண்டுக்கோள். இன்னொன்று. இதோ எனக்குப் பக்கத்தில் நிற்கும் கிழவன் யார் தெரியுமா — இவன்தான் இந்நாட்டின் தளகர்த்தன்—அர்ட்டாங்கன், எனக்குப்பேருதவி புரிந்த பெருந்தகையாளன்!

"துரோகிப்பயல்!" பல்லைக் கடித்தான் மஜார்,

"ஆத்திரப்படாதீர்கள், மஜார். ஆர்ட்டாங்கன் துரோகி யல்ல. என் படையில் அவன் சேர்ந்து இரண்டு நாட்கள் தானாயிற்று. ஆனால் அவன் சேரும்போது தளகர்த்தன் பணியை ராஜிநாமா செய்துவிட்டுத்தான் சேர்ந்தான்.

"எங்கே ராஜிநாமா கடிதம்?"

'அதோ உங்கள் சட்டப்பையில்!'

மஜார் பையைத்தடவிப் பார்த்தான்—அதில் ராஜிநாமா கடிதம் இருந்தது. விழித்தான் மஜார்.

"மந்திரமில்லை மாயமில்லை மஜார், ராஜிநாமா கடிதத்தை உம்மிடம் சேர்ப்பிக்க வரும்போது நீர் ராணியின் மடியிலே சாய்ந்து கொண்டு கண்ணயர்ந்திருந்தீர். இன்ப வேளை-இடையூறு செய்யக் கூடாதென்றெண்ணி பக்கத்தில் தொங்கிய உமது சட்டைப்பையில் ராஜிநாமா கடிதத்தை வைத்துவிட்டு வந்தான்; அவ்வளவுதான்! அவை நிம்மதியில் ஆழ்ந்தது. கொண்டாவின் கையிலே சுதந்திர சாசனம் தரப்பட்டது. 'பிரஞ்சு, பிரஞ்சுக்காரருக்கே' என்ற பேரொலி வானைப் பிளந்தது.

---

# சக்கரவர்த்தி.....

[ 2-ம் பக்க தொடர்ச்சி ]

பட்டாபிஷேக வைபவம். அதில் சகோதரன் பரதன் இல்லாமல் — தான் பட்டம் கட்டிக் கொள்ள ராமனும் சம்மதித்து விட்டான். பரதன் வந்து விட்டால் தசரதன் தன் அன்னையை திருமணம் புரியும்போது, தன் தாத்தா கேகய மன்னனிடம் கொடுத்த வாக்கை நினைவுப்படுத்தி பட்டாபிஷேகத்தை தடுத்து விடுவானும்—அதற்காக பயந்து ராமனுக்கு பட்டம் கட்டும் சதியில்—வசிஷ்டமுனிவர், தசரத சக்கரவர்த்தி யென்னும் தர்மப்பிரபு, பகவான் ராமச்சந்திரமூர்த்தி — ஆகிய இத்தனை பேரும் கலந்து கொள்கிறார்கள்.

"ஏதாவது இடையூறு நேருமோ" என்று தசரதனுக்கு திகில் இருந்ததாம்! இருக்காதா திகில்? இருக்கும்! பெந்தனையை மறந்து, பரதன் ஊரில் இருந்து வருவதற்குள் ராமனுக்குப் பட்டம் கட்ட வேண்டுமென்று சதி செய்த தசரதனுக்கு திகில் இருக்காதா? இத்தகைய தசரதனின் திருமகனாகப் போய் மகாவிஷ்ணு பிறந்தாரே; அதில் அல்லவா இருக்கிறது ஆச்சரியம்! விஷ்ணுவைப் பங்கு போடப் பிறந்த பிள்ளைகள் நால்வரும்! அந்த நால்வருக்குள்ளாகவே சதி! அதுவும் அதிகப் பங்கில் அவதரித்த ஸ்ரீராமன், தந்தையின் சதிக்கு உடந்தையாக இருக்கிறான், பட்டாபிஷேகத்திற்கான சகல முன்னேற்பாடுகளையும் அவனும் கவனிக்கிறான் தன்மனைவியுடன்!

இந்த இதழில் ஆச்சாரியார் எழுதிய கட்டுரை, அவரையும் அறியாமல் ஒரு உண்மையை உணர்த்திவிட்டது,

தசரதன், கேகய மன்னனுக்கு வாக்களித்து, கைகேயியை மணந்தான். இப்போது அந்த வாக்குறுதியை காற்றில் பறக்கவிட்டு, ராமனுடன் சேர்ந்து சதி செய்து அவனையே பட்டத்திற்குரியவனாக்க திட்டமிட்டு விட்டான். அதற்கு ராமனும் உடந்தை, என்கிற உண்மை தான் அது!

# கலைத்தோட்டம்

## எழுத்து வேந்தன்—எமிலிஜோலா

★

வேதனைக்கும் வியர்வைக்குமிடையே, இருள் கவிந்த சுரங்கத்தில் உழலும் பாட்டாளி, ஒரு நாள் அதே சுரங்கத்தின் சொந்தக்காரனாக மாற முடியுமா?

விண்ணுக்கும் மண்ணுக்குமிடையே, அந்தரத்திலே நடுங்கி நடமாடி மாளிகை அமைக்கும் ஏழை, அதே அழகு மாளிகையின் உச்சி மாடியிலே உலவும் உரிமையாளனாக மாற முடியுமா?

"எப்படி முடியும்?" என்பர் பலர்; "முடியவே முடியாது" என்று முடிவு கட்டுவர் அநேகர்

அவர்களிடம் போய் "எமிலி ஜோலா என்றொருவன் இருந்தான், பரம ஏழையாக; பராரியாக; 'பார்சல்' கட்டும் சாதாரண தொழிலாளியாக—ஆனால் அவனே ஒரு நாள் பார் போற்றும் மேதையானான். புத்தகங்களைக் கட்டிப்பிழைத்த அவன், தித்திக்கும் தேனேடுகள் பலவற்றை எழுதிக் காட்டினான்" என்று சொன்னால் நம்புவதற்கு தயங்கத்தான் செய்வார்கள்.

ஆனால், எமிலிஜோலா என்ற அந்த இலக்கியப் பெருங்கிழவனின் வாழ்வென்னவோ சுழலும் சக்கரமாகத்தான் இருந்தது. சுழன்றடிக்கும் சூறாவளியாக ஒரு நேரம்—சிறப்பையும் செல்வத்தையும் தாங்கிவந்த தென்றலாக மறு சமயம்—இப்படி வாழ்வின் விசித்திர விளையாட்டுக் கருவியாகத்தான் இருந்தான் அவன்.

ஃ ஃ ஃ

வலையில் சிக்கிய சிறுமான் வெளியேறத் தவிக்கும் நிலையைப் போல, பழைமையிலே மூழ்கிக் கிடந்த இலக்கியம் மறுமலர்ச்சி காண துடித்துக் கொண்டிருந்த நேரம்—நாகரீகத்திற்கு மணி மகுடம் அமைத்துக் கொண்டிருந்த பிரான்ஸ் பூமியின் பாரிஸ் மாநகரம்—அங்கே 1840-ம் ஆண்டு, ஏப்ரல் மாதம், இரண்டாவது நாள் பிறந்தான் ஒரு 'உருப்படாதவன்!'

பிறக்கும்போதே இந்தச் சிறப்புடன்தான் பிறந்தார் எமிலி ஜோலா. ஊராரின் ஊடுருவிப் பாய்ந்த வெறுப்புக் கண்களுக்கு அவர் வேண்டாதவன்; உலுத்தன்; உதவாக்கரை; ஏனெனில் அவரது பிறப்பு ஒரு 'கலப்படம்', புரியும்படி சொன்னால் அவரது தாய் பிரெஞ்சு நாட்டவள்; தந்தை இத்தாலிக்காரர்; பாட்டியோ கிரீஸ் தேசக்காரி!

கேட்க வேண்டுமா வேலையற்றோருக்கு! விபரீதம் என்றனர், வேதனை பேசினர். ஆனால் அன்று தெரியாது அவர்களுக்கு பல தேச கூட்டு ரத்தத்திலே உதித்த அந்தச் சிறுவன் தெவிட்டாத 'ஒட்டுமாங்கனி'யாகப் போவதை! இலக்கிய வானிலே ஈடற்ற விண்மீனாக பதியப் போவதை!

நாற் புறமிருந்தும் தாக்கிய நாச மொழிகளைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு நடக்க எழுந்தது ஜோலாவின் சிறு உரு. ஆனால் பேரிடி ஒன்று விழுந்தது, தந்தையின் மரணம் என்ற உருவிலே. திறமை மிக்க இன்ஜினியராக வேலை செய்து வந்தாலும் அவரது தந்தை அவருக்கு விட்டுச் சென்றதென்னவோ பொருளில்லை; பணமில்லை; "உழைப்பாய் நன்றாய்; உயர்வாய் மகனே!" என்ற அமுத மொழிகளைத்தான்!

எமிலிஜோலா வளர்ந்தார். வளர்ந்தபடியே உழைத்தார், உழைத்தபடியே உயர முயன்றார்.

ஒரு வேளை உணவு—இரு வேளை பட்டினி—தாயின் பரிவுப் பேச்சு—உறவினர்களின் 'முணமுணப்பு' உதவி, இவைகளுக்கிடையே கல்லூரியையும் மிதித்தார். ஆனால் பட்டம் பெறும் பேற்றை அவர் பெறவில்லை, இலக்கியத்தில் தேர்வு இல்லையாம்; தோல்வி தேடி வந்தது அவரிடம்.

ஆதரவற்ற நிலையில் நிறுத்தப்பட்டார் ஜோலா. சூறாவளி புகுந்தது; வேதனை யெனும் புழுதியை வாரி இறைத்தது, அவர் வழி தெரியாது திகைத்தார். நடந்தார் கால் பட்ட பாதையில். அந்தப் பாதை அவரை ஒரு குமாஸ்தாவின் ஒடிந்து போன நாற்காலியிடம் அழைத்துப் போய் உட்கார வைத்தது.

அவர் விரும்பியது அதையா? ஓட்டை மேஜையும், கட்டுக்கட்டான கணக்கேடுகளும், முதலாளி என்ற மனித உருவின் மிருகத்தன்மையும் அவரை அந்த நாற்காலியில் அதிக நாட்கள் உட்கார வைக்கவில்லை. எழுதிப் பிழைக்கலாம் என்ற எண்ணம் அவர் மனதிலே தோன்றிவிட்டது. அந்த எண்ணம் நல்லதைச் செய்யாவிடினும் பழைய வேலையைப் பறித்துக் கொண்டது. அவர் எழுதினார். ஆனால் ஏற்றுக் கொள்ளவில்லை இலக்கிய உலகம்; ஏளனம் செய்யவும் தயங்கவில்லை.



வரவேற்காத இலக்கிய மண்டலத்திற்குள் வலுக்கட்டாயமாக நுழைய துணையொன்றைத்தேடினார் ஜோலா. பால் செஸானே என்ற நண்பனொருவன் கிடைத்தான். அவன் சித்திரக்காரன். இருவரும் கூட்டுப் படையெடுப்பு செய்தனர். ஜோலா காவியம் எழுத மற்றவன் ஓவியம் தீட்டினான். பலன்? பசிதான்...பரிதாபம்தான்...பரதேசிக் கோலம்தான்.

சகிக்க முடியாத ஏழ்மை—தாங்க முடியாத பசி இவைகள் உந்தித் தள்ள அந்த ஏழை இலக்கிய வெறியன் மீண்டும் வேலை ஒன்றைத் தேடிக்கொண்டான், ஒரு புத்தகப் பிரசுராலயத்தில். புத்தகங்களைக் கட்டாகக் கட்டி 'பார்சல்' செய்ய வேண்டியது அவனது வேலை. அந்தச் சாதாரண வேலைதான் ஜோலாவின் சாகாத புகழுக்கு காரணமாக அமைந்துவிட்டன.

இலக்கியப் பசி எடுத்துத் தவித்துக் கொண்டிருந்த ஜோலா அந்தப் பதிப்பகத்தில் நிறைய படித்தார்; படத்ததின் பலனாக மீண்டும் எழுதினார், எழுதிக் குவித்த வண்ணம் இருந்தார்.

அவரது இலட்சியக் காவியங்கள்—உயர்ந்த தத்துவங்களின் உண்மைவிளக்கங்கள்—ஆழ்ந்த கருத்துக்களுக்கான அழகு உருவங்கள்—இவை அனைத்தும் மக்கள் மன்றத்தின் கண்களுக்கு அப்போதுதான் புலப்பட்டன—வாழ்த்தையும் வரவேற்பையும் பெற்றன.

இன்பத்தால் துள்ளிக் குதித்தார் ஜோலா. ஏங்கிக் கிடந்த அவரது கரம் — சமயத்தை நாடிக் கொண்டிருந்த அவரது எழுதுகோல்—இரண்டும் ஓயாமல் எழுதிக் கொண்டேயிருந்தன. ஆண்டு ஒன்றுக்கு அற்புத நாவல் ஒன்றாக அளித்தார்.

அவரது இருபத்தி நான்காவது வயதில் முதன் முதலாக பெருவெற்றியை கண்ட நாவல்கள் நாநாவும் நாநாவின் தாயுமாகும். சமூக மெனும் சாக்கடையிலே நெளிந்து கொண்டே வாழ்வின் தத்துவத்தை விளக்கிக் காட்டிய அந்த வனிதைகளின் சரித்திரம் உலகப் பெருமையைத் தந்தது. அவருக்கு உலகத்தோரின் நெஞ்சத்திலே மாளாத புகழைத் தேடிக் கொண்டார் எமிலிஜோலா, எழுத்துலச் சிற்பியாக மட்டுமல்ல; புது உலக அரசியல் மேதையாக-அரசாங்கத்தையும் எதிர்த்து நின்ற புரட்சிவீரனாக.

ஜோலாவை அரசியல் வாழ்வுக்கு அழைத்துச் சென்றது. ஒரு வழக்கு. பிரஞ்சு நாட்டின் பரமவைரியான ஜெர்மன் நாட்டுக்கு, ரகசியக் கடிதம் எழுதினார்—என்ற ஒரு தவறான குற்றச்சாட்டை 'டிரைபஸ்' என்ற ராணுவ அதிகாரியின்மீது சுமத்தி ஆயுள் தண்டனையும் அளித்துக் களித்தது பிரஞ்சு சர்க்கார்.

இதை அறிந்த ஜோலாவின் நெஞ்சு துடிதுடித்தது. டிரைபஸ் அவருக்கு அறிமுகமில்லாதவன்தான்; ஆனாலும் குற்றமற்றவன், ஆகவே வாதாடினர்—போராடினார்! அந்த வழக்கிற்கென்று தனிப் பத்திரிகை ஒன்றையும் ஆரம்பித்தார். அள்ளி வீசப்பட்ட அவரது ஆதாரங்களை மக்கள் மன்றம் ஒப்பியது; ஆனால் ஆட்சிபீடமோ சீற்றத்தை ஏற்றது. சிக்கிய ஜோலாவுக்கு சிறைத் தண்டனை—ஓராண்டு.

எழுதிக் குவிக்க வேண்டிய பொன்னேரத்தை சிறையிலே சிக்கவைக்க பயந்தார் ஜோலோ; தப்பி ஓடினார் கடல் கடந்து இங்கிலாந்து நாட்டிற்கு. அங்கிருந்தும் எழுதினார் டிரைபசைக் காக்க.

கள்ளத்தனமாக தப்பி ஓடி வந்த அவரை ஒருநாள் பிறந்த நாடு பெருமையுடன் வரவேற்றது; ஏகாதிபத்திய பித்தேறிப் போயிருந்த ஆட்சி பீடத்துடன் அந்தத் தனி மனிதர் தொடுத்த பெரும்போர் வெற்றியைத்தான் தந்தது. டிரைபஸ் விடுதலையானார்;

அந்தச் சம்பவத்திற்குப் பிறகு ஜோலா அதிக நாட்கள் வாழ்ந்திருக்கவில்லை. அவர் எழுதிக் கொண்டிருந்த 'நீதி'யும் 'டிரைபஸ் வழக்கு'ம் முடிவு பெறாத நிலையிலேயே தனது அறுபத்து இரண்டாவது வயதில் மரணமடைந்தார். கணப்புக் குழாய் கிளப்பிய விஷப்புகையால் இறந்த அவரது பரிதாபகரமான மறைவுகேட்டு உலகமே திடுக்கிட்டது. அவரது பிரேத ஊர்வலத்திற்கு பாரிஸ் நகரமே திரண்டு வந்தது, ஜோலாவால் விடுதலை மனிதனான டிரைபசின் தலைமையிலே!

மதுவிடமும் மங்கையிடமுமே 'உலக'த்தைக் கண்டு கொண்டிருந்த உல்லாசப் பிரியர்களுக்கு உண்மையைக் காட்ட—நாகரீகத்தை நாசக் கருவியாக்கியவர்களுக்கு நல்லதொரு பாடத்தைக் கற்பிக்க எமிலிஜோலா எழுதிய நாற்பது நாவல்களும் எண்ணற்ற சிறுகதைகளும் என்றும் குன்றாத புகழைப் பெற்றுவிட்டன; அந்த வெற்றிவேந்தனின் திருப்பெயரும் வீரபவனி வருகிறது.

# கடைசிப்பக்கம்

எஸ். சாமிநாதன்—தாடிகொம்பு.

(?) திராவிடநாட்டிற்கு நான்கு மொழி கூட்டாட்சி என்கிறீர்களே; அந்த நான்கு மொழிகளில் மலையாளத்தை எதிர்த்து தமிழகப் போராட்டத்தில் தி. மு. க. பங்கு கொள்வது ஏன்?

*மலையாளிகளை எதிர்த்து அல்ல தோழரே! மலையாளியும் தமிழரும் ஒருவருக்கொருவர் மோதிக் கொள்ளும் நிலையை உண்டாக்கும் டெல்லியை எதிர்த்துத்தான் தி. மு. க. போரிடுகிறது. குறுக்கே விபீஷணர்கள் வந்தால் அவர்கள் தமிழராயிருந்தாலும், மலையாளிகளாயிருந்தாலும் தி. மு. க. அவர்களையும் எதிர்த்தே தீரும்.*

என். எஸ். பந்தம்—சென்னை-1

(?) காதலுக்கும் கடமைக்கும் உள்ள பொருள் கூறுக?

*காதலிலேயிருந்து ஒருவித உணர்ச்சி எழும். உணர்ச்சி பெற்றவன் கடமையை மேற்கொள்வான். காதல் உணர்வு—கடமை உணர்வு—இரண்டுமே—வேறுவேறு! இரண்டும் ஒன்றையொன்று பின்னிக் கொண்டிருக்கவேண்டுமே தவிர—மோதிக் கொள்ளக்கூடாது.*

சு. ராமசாமி—பாளை.

(?) திரு—கொச்சி தமிழக போராட்டத்தில் தி. மு. க. பங்கெடுத்தது போல் பிரஞ்சிந்தியப் போரில் ஏன் பங்கு பெறவில்லை?

*பிரஞ்சிந்தியப் போராட்டத்திலும் ஏராளமான தி. மு. கழகத் தோழர்கள் பங்கெடுத்துக் கொண்டுள்ளனர். பலர் கைதாகியுமிருக்கிறார்கள். தி. மு. க. தன் ஆதரவை தந்திருக்கிறது.*

பி. மலையான்—சென்னை 1.

(?) திரு-கொச்சி தமிழ்ப் பகுதி போராட்டத்தில் தி. மு. க. ஈடுபடுவதை கம்யூனிஸ்டுகள் விரும்பவில்லையென்று உங்களுக்குத் தெரியுமா?

*இதிலென்ன ஆச்சரியம். நாளைய தினம் திராவிடநாடு கிடைத்து, அதில் ரஷ்யாவையும் மீறிய பச்சைப் பொதுவுடைமை ஆட்சி ஏற்பட்டால் அந்தப் பொதுவுடைமை ஆட்சியை தி. மு. கழகம் கொண்டுவந்தது என்பதற்காகவே அந்த ஆட்சியை கம்யூனிஸ்டுகள் எதிர்ப்பார்கள் என்று எங்களுக்குத் தெரியுமே.*

வைத்திநாதன்—ஆரணி.

(?) குடியாத்தம் தேர்தலில் கம்யூனிஸ்டுகள் ஏன் தோற்றார்கள்?

*ஓட்டு - குறைந்து விட்டது, அதனால்!*

பி. எம். சொக்கலிங்கம்—சென்னை-1

(?) எழுதுவதில்—எந்த நடை சிறந்தது?

*அர்த்தமற்ற அடுக்குச் சொற்கள் இல்லாமல்-அழகும் குறையாமல்-கருத்தை தெளிவாகச் சொல்லும் எழுத்து நடைதான் எழிலான நடையென்பேன்.*

*கருத்து-வைரம்! சொல்லும் முறை - அதற்குத் தீட்டப்படும் பட்டை! பொருள்-பொன் அர்த்தமுள்ள அடுக்குத்தொடர் அதற்குத் தரப்படும் மெருகு அவ்வளவுதான்.*

சாமியப்பன்—பெங்களூர் கண்டோண்மண்ட்

(?) பிரஞ்சுக்காரர்கள் பாண்டிச்சேரியை விட்டு போவதைப் பற்றி யார் கவலை படுவார்கள்?

*யார் கவலைப்பட்டால் உமக்கென்ன தோழரே! நீர்தான் முன்னதாகவே போய் பெங்களூரில் உட்கார்ந்து விட்டீரே!*




மு. கருணாநிதியால் 'முரசொலி' அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. அலுவலகம்:
62, எஸ். பி. சன்னதி தெரு, ராயப்பேட்டை, சென்னை—14.